உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி–சஉ.] பார்த்திப-ஹு ஆவணி—ஐப்பசிமீ [பகுதி. கo-கஉ.
Vol. 42. August—November 1945. No. 10-12.

உள்ளுறை.

ஒருதுறைக்கோவை யாராய்ச்சி:— T. K. இராமாநுஜையங்கார் உதவிப்பத்திராசிரியர் கசுகூ—கஙுக
இளம்பூரணஅடிகளும் மணக்குடவரும்:— ஸ்ரீ. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் கஙுஉ—கஙுசு
உதவிப்பத்திராசிரியர்குறிப்பு:—T. K. இராமாநுஜையங்கார் கஙுஎ—கசுச
திருக்குற்றலத்தலபுராண இன்கவிவிளக்கம்:– ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. கசுரு—கசுஅ
குமரகுருபரர்:—ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் கசுகூ—கஎசு
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள்:— கஎசு—கஎஎ, கஅகூ
ஏரெழுபது:–ஸ்ரீ. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள் கஎஅ—கஅச
ராவ்பஹதூர் நல்லதம்பிச் சர்க்கரைமன்றடியார் நினைவுக்குறிப்பு:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G. B. V. C. கஅரு—கஅஅ
மதிப்புரை:— ககூo
செந்தமிழ் 42-ஆம் தொகுதியின் உள்ளுறை முதலியன:—
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— (அநுபந்தம் 1—8.)

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1945.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

"செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற நாற்பத்திரண்டுவருட காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோருமுணர வெளியிடும்பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு 42-ஆம் தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, 43-ஆம் தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நாளிது பார்த்திபஸு கார்த்திகைமீ 30உக்குள் வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப் பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்து வரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

அரசாங்கத்தார் வெளியிட்ட காகிதக்கட்டுப்பாட்டுத்தரவால் செந்தமிழ் பழையபக்கஅளவிற் குறைந்து வெளிவருகிறது. கூடிய விரைவில் செந்தமிழ் அதிகமான பக்கங்களுடன் வெளிவரும். சந்தா நேயர்கள் பக்கக்குறைவைப் பொருட்படுத்தாது, வழக்கப்படி செந்தமிழை ஆதரித்துவரவேண்டுகிறோம்.

குறிப்பு:— 43-ஆம்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், நாளிது பார்த்திபஸு கார்த்திகைமீ 25உக்குள் இச் சங்கமாபீசிற்குக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பிவைத்தல் வேண்டும். அதற்குள் மணியார்டர் வராவிட்டால் 43-ஆம் தொகுதியின் முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனுப்பப்பெறும். வி. பி. அனுப்பியபின்பு அதனைப் பெற்றுக்கொள்ளாது திருப்பி விடுவதால் சங்கத்துக்கு வீண்செலவு நேரிடுமாதலால் தயைசெய்து வீ. பி. யைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

26—11—45.
மதுரை.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-சஉ.] பார்த்திப௵ ஆவணி to ஐப்பசி௴ [பகுதி.கo-கஉ.

Vol. 42. August—November 1945. No. 10-12.

ஒருதுறைக்கோவையாராய்ச்சி

[ககஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி]

"சேயென் றுவந்த தளவாய்க்கு நாவலந் தீவிற்குமோர்
தாயென்று வந்த ரகுநாதன்"

என்பது இக்கோவையின் 22-ஆம் பாட்டின் முற்பகுதியாகும். இப்பகுதி, இக்கோவைப்பாட்டுடைத்தலைவன் பெருமைகூறுவது. இத்தலைவன்பெயர் ரகுநாதன் என்பது. இவ்வேந்தர்பெருமான், ரகுநாயகன் (2) சயரகுநாதன் (139) விஜயரகுநாதன் (142) ரகுநாதசேதுபதி (151) தளவாய்ரகுநாதன் (1) தளவாய்ரகுநாயகன் (13) தளசிங்கம் (126) என்றும் இந்நூலுள் ஆங்காங்குச் சுட்டப்படுகிறார். இவ்வரசர், கி. பி. 1635க்குமேல் 1645 வரை சேதுநாட்டையாண்ட தளவாய்சேதுபதியின் சோதரிபுத்திரராய்த் தோன்றி, அத் தளவாய்சேதுபதியால் அபிமானபுத்திரராகக் கொண்டு முடிசூட்டப்பெற்றுச் சேதுநாட்டரசுரிமைபூண்டவர் என்று சரித்திரஆசிரியர் கூறுவர். இவர் தளவாய்சேதுபதியின் அபிமானபுத்திரர் என்பது, மேலேகுறித்த அடிகளுள் 'சேயென்றுவந்த தளவாய்க்கு' என்பது கொண்டும் அறியலாம். இவர், தளவாயின் அபிமானபுத்திரரானமையாலும் இவர்பாலமைந்த (பெரும் படைத்தலைமைபூண்டு அவற்றை நடத்திவெல்லும்) ஆற்றலாலும் தளவாய்ரகுநாதன் தளவாய்ரகுநாயகன் தளசிங்கம் என்றும் சுட்டப்பெற்றனர்போலும்.

இவ்வரசர்பெருமைபேசும் மேற்குறித்த அடிகளுக்கு, உரைப்பதிப்புள்,

"சேய் என்று வந்த - முருகனென்று சொல்லப்பட்டுத் தோன்றிய, தளவாய்க்கும் - தளவாய்ப்பட்டத்துக்கும், நாவலந் தீவிற்கும்—நாவலந்தீவுக்கும், ஓர்தாய் என்று வந்த - ஒப்பற்ற தாயென்று சொல்லும்படிவந்த"

என்று பதவுரையும்,

"தளவாய்க்குத் தாயென்றதனால் தளவாய்ப்பட்டத்துக்குரியான் என்பதும், நாவலந்தீவிற்குமோர் தாயென்றதனால் ஜம்புத்வீபத்திலுள்ளாரெல்லாரையும் காப்பாற்றுவதில் தாய்போலும் கருணையுள்ளானென்பதும் வெளியாயின"

என்று விசேடவுரையும் வரையப்பட்டுள்ளன.

இங்கே நாவலந்தீவிற்கும் எனப் பின்னே ஓர் உம் இருப்பது கண்டு, அதனை எண்ணும்மையாகக்கொண்டு, அதற்கியையத் தளவாய்க்கும் என முன்னும் ஓர் உம் விரித்து, 'தளவாய்க்கும் ஓர் தாயென்று வந்தர குநாதன்' என்று கொண்டு உரைத்த பொருள் பாட்டுடைத்தலைவன்வரலாற்றோடு இயைபுடையதாயில்லை. அன்றியும், இவ்வுரைகளுட்கண்டவாறு தளவாய் என்பதனைப் பட்டமாக மட்டும் கொள்ளுதலும் தளவாய்ப்பட்டத்துக்குரியானைத் தளவாய்க்குத்தாயென்றலும் அமைவுடையவாகா. மேலும், 'சேயென்றுவந்த' என்னும் பெயரெச்சத்தொடர், அடுத்துள்ள தளவாய் என்னும் பெயரைக்கொண்டுமுடியாது, சேய்த்தாயுள்ள ரகுநாதன் என்னும் பெயரைக்கொண்டுமுடிந்ததாகக் கொள்ளுவதும், 'சேயென்று வந்த', 'தாயென்று வந்த' என இரண்டிடத்தும் ஒருபடியாக வந்த என்றே பிரித்துப் பொருளுரைப்பதும் சிறப்பில்லை.

இவ்வாறு பல மலைவுகளுக்கிடனாகப் பொருள்விரிக்கும்படி அமுதகவிவாக்கு அமையாதாதலால், மேற்குறித்த அடிகளை இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் உள்ள இக்கோவையேட்டுப்பிரதிகளில் ஒப்புநோக்கியதில் 490-ஆம் எட்டுச்சுவடியில் மேற்காட்டிய முதலடியின் இறுதி 'நாவலந்தீவினுக்கோர்' என்று காணப்பட்டது.

இப்பாடங்கொள்ளின், அவ்வடிகளுக்கு, 'சேய் என்று உவந்த—புத்திரனென்று மகிழ்ந்துகொண்ட, தளவாய்க்கு—தளவாய்சேதுபதியினிடத்து, நாவலந்தீவினுக்கு—சம்புத்தீவத்துக்கு, ஓர் தாய் என்று வந்த—ஒப்பற்ற தாய்போல வந்த—ரகுநாதன்' என்று பொருபடும்.

இவ்வாறுரைக்குமிடத்து, 'தளவாய்க்கு' என்பதில் குவ்வுருபு ஏழனுருபின்பொருட்டு. 'நாவலந்தீவினுக்கோர்தாயென்று வந்த ரகுநாதன்' என்றது, உலகில் ஆங்காங்குள்ள சில பல வுயிர்களை அவ்வவற்றைப்பெற்றவேறுவேறான தாய்கள் தம்மால் இயன்ற தலையளிசெய்துகாத்தல்போலாது, சேதுநாட்டுள்ள உயிர்த்தொகுதிக்கேயன்றி நாவலந்தீவுமுழுவதிலும் உள்ள உயிர்த்தொகுதிகட்கெல்லாம் தான் ஒரே தாயாய்நின்று குறையற்ற தலையளிசெய்து காக்கும் சிறப்பியல்பினன் இரகுநாதன் என்று பாட்டுடைத்தலைவன் பெருமைகூறியவாறு. இக்கருத்து, 'அயனங்களித்த *இருதிணை †நாற்கதியாமுயிர்க்கெண் பயனங்களித்த ரகுநாதன்' (240) என்று இப்பாட்டுடைத்தலைவனையே பின்னரும் இந்நூலாசிரியர்கூறுதலால் நன்குவிளங்கும். (தனக்குச்) சேயாக உவந்துகொண்ட தளவாய் சேதுபதியினிடம் ரகுநாதன் (நாவலந்தீவினுயிர்க்கெல்லாம் ஒப்பற்ற ஒரே) தாயாகவந்தான் என்றது கவிசாதுரியம்.

இவ்வாறு எட்டிற்கண்ட 'நாவலந்தீவினுக்கோர்' என்றபாடமும் அதுகொண்டுரைத்த பொருளும், பாட்டுடைத்தலைவன் பெருமையை இனிதுவிளக்கி அவன் வரலாற்றோடு நன்கியைவனவாயும் முன்னே குறித்த மலைவுகள் அற்றனவாயும் இருத்தலால் மிகவும் அமைவுடையனவாகும்.

எனவே, 490-ஆம் எட்டிற்கண்டபடி

'சேயென் றுவந்த தளவாய்க்கு நாவலந் தீவினுக்கோர்
தாயென்று வந்த ரகுநாதன்'

என்று முதலில் வழங்கியபாடமே, பொருளுணர்ச்சியற்ற எழுதுவோரால், பின்னர், தளவாய்க்கும் நாவலந்தீவிற்கும் என்று உம்மைகள் விரித்தெழுதப்பட்டு, "சேயென்றுவந்த தளவாய்க்கு நாவலந் தீவிற்குமோர் தாயென்றுவந்த ரகுநாதன்" என்று மாறியதென்று தோன்றுகிறது.

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

---

* இருதிணை - இயங்குதிணையும் நிலைத்திணையும்=சராசரம்.

† நாற்கதி - மக்கள், தேவர், நரகர், விலங்கு என்பவை.

உ

இளம்பூரண அடிகளும் மணக்குடவரும்

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்

தொல்காப்பியம் என்னும் பண்டைத் தமிழிலக்கணத்திற்கு நல்லுரைகண்ட தொல்லாசிரியராகிய இளம்பூரண அடிகளின் அருமைபெருமைகளைப் புலவர்பெருமக்கள் நன்கறிவர். இவ்வடிகள், தொல்காப்பியமாகிய கருவூலத்துள் முதலிற் புகுந்து பண்டைத்தமிழ்மக்களின் வழக்க ஒழுக்க நாகரிகங்களாகிய அரும் பெறன்மணிகளை நம்மனோர்க்குவழங்கிய பெரியார் ஆவர். சேனவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், அடியார்க்குநல்லார் ஆகிய மற்ற உரையாசிரியன்மாரெல்லாம் இவரது பெருமையினை நன்குணர்ந்து இவர்பால் எத்துணைமதிப்புவைத்திருந்தனர் என்பது அவர்கள் உரைகளால் இனிது அறியக்கிடக்கின்றது. அத்துணைப்பெருமையும் ஆற்றலும் வாய்ந்த இவ்வடிகள், தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளுக்கு ஓர் உரையும் கொங்குவேளிரால் இயற்றப்பெற்ற பெருங்கதைக்கு ஒரு குறிப்புரையும் எழுதியுள்ளனர் என்பது இவரது உரைப்பாயிரச் செய்யுள் ஒன்றால் புலனாகின்றது. அது,

'தண்கட லசைவளி யுறுப்பத் திரைபிதிர்ந்
தூங்கலின் பொருட்குவைப் புணரியி லையுற
[1]அலைவமன் மயரினை யகற்ற [2]லெழுத்தால்
திணைதுறை யுட்கோள் இயற்றிற னறியாக்
கவர்பொருண் மாக்கண் மயக்கினுக் கிரங்கிப்
பாயிருங் காப்பியச் சுவைபல வுணர்ந்தகங்
தோய மடுத்தோர் தொல்காப்பியனுரை
முத்திற வோத்தினுக் கோத்தசீர்க் காண்டிகை

---

[1] வலைவமன், [2] (மூன்றமடியின் இறுதிச்சீரும் நான்காம் அடியின் முதற்சீரும்) லெழுத்தா றிணை துறை: என்பவை, செந்தமிழ் 20-ஆம் தொகுதியின் 503-ஆம் பக்கத்தில் வெளிவந்த இச்செய்யுளிற் காணப்படும் பிரதிபேதங்கள். [ப-ர்.]

சொன்னிலை மேற்கோள் தொகு[1]பொருள் துணிபுடன்
இயல்நூற் பாமுடி பிணைத்தடி [2]காட்டித்
தலைகடை கூட்டித் தந்தனன் பண்டே
கொங்குவேண் மாக்கதை குறிப்புரை கண்டோன்
தன்னறி யளவையில் நல்லுரை தேவர்
பன்மணிக் குறட்பான் மதிப்பிடப் பொறித்தோன்
குணகடற் செல்லூர் [3]மணக்குடி புரியான்
தண்முலை முகையென வெண்ணூல் சூடி
யந்தணன் துறவோன் அருமறை யுணர்ந்த
இளம் போதி பயந்த புனிதன்
இளம்பூ ரணனுரை யினிதுவாழ் [4]'கீங்கேன்'

என்பதாம்.

அடிகள் தொல்காப்பியத்திற்கு உரையெழுதுவதற்குமுன்னரே கொங்குவேண்மாக்கதைக்குக் குறிப்புரையும் திருக்குறளுக்கு உரையும் எழுதிமுடித்துவிட்டனர் என்பது இவ்வுரைப்பாயிரத்தால் வெளியாதல் காண்க.

இனி, திருக்குறளுக்கு, முற்காலத்தில் பதின்மர் உரைகண்டுள்ளனர் என்பது,

'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்'

என்னும் பழையபாடலொன்றால் அறியப்படுகின்றது. இப்பாடலிற் குறிப்பிடப்பெற்ற பதின்மருள் இளம்பூரண அடிகள்பெயர் காணப்படவில்லை. உரையாசிரியன்மாருள் மிக முந்தியவராகிய இவ்வடிகள் திருக்குறளுக்கு ஓர் உரையெழுதியிருப்பதை அவ்வெண்பாவைப் பாடியவர் அறிந்திருக்கமாட்டார் என்று கூறுவது எவ்வாற்றானும் பொருந்தாது. அன்றியும், திருக்குறளுக்கு உரையெழுதிய அறிஞர் எல்லோரையும் கூறவந்த அப்பெரியார், அன்னோருள் இறுதியிலிருந்த பரிமேலழகரைக் கூறிவிட்டு மிகப் பழைய

[1] பொரு டுணிபுடன், [2] காட்டி, [3] மணக்குடபுரியான், [4] கீங்கெனா: என்பவை, செந்தமிழ் 20-ஆம் தொகுதியின் 503-ஆம் பக்கத்து வெளிவந்த இச்செய்யுளிற் காணப்படும் பிரதிபேதங்கள். [ப-ர்.]

உரையாசிரியராகிய இளம்பூரண அடிகளைக் குறிப்பிடாமற்போரகார் என்பது திண்ணம். ஆகவே, அவ்வெண்பா இயற்றப்பெற்றகாலத்தில் திருக்குறளுக்கு இளம்பூரணர் எழுதிய உரை, வேறுபெயரோடு வழங்கியதாதல்வேண்டும். அங்ஙனமாயின் அவ்வுரை எப்பெயரோடு வழங்கியிருத்தல்வேண்டும் என்பது ஈண்டு ஆராயற்பாலதாகும்.

மேலேகாட்டப்பெற்ற தொல்காப்பிய இளம்பூரணர் உரைப் பாயிரத்தில் அடிகள், கீழ்கடலைச்சார்ந்த செல்லூரிற் பிறந்தவர் என்பதும், மறையில் வல்ல இளம்போதி என்பவரின் புதல்வர் என்பதும், துறவறநெறியில்நின்ற அந்தணரென்பதும், இளம்பூரணர் என்ற இயற்பெயருடையவர் என்பதும், மணக்குடிபுரியான் என்ற தொல்குடியில் தோன்றியவர் என்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. மணக்குடியுடையான் என்னுங் குடிப்பெயரே மணக்குடிபுரியான் என்று பாயிரத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

இனி, நாகன்குடியுடையான், அண்டக்குடியுடையான், கடுவங்குடியுடையான், இளையான்குடியுடையான் என்னும் குடிப்பெயர்கள் முறையே நாகன்குடையான்,[1] அண்டக்குடையான்,[2] கடுவங்குடையான்,[3] இளையான்குடையான்[4] என்று முற்காலத்தில் வழங்கிவந்தன என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. எனவே, மணக்குடியுடையான் என்பதும் மணக்குடையான் என்று அக்காலத்தில் வழங்கியிருத்தல்வேண்டும். ஆகவே, இளம்பூரண அடிகள், மணக்குடையார் என்ற தம் குடிப்பெயராலும் தொடக்கத்தில் வழங்கப்பெற்றிருத்தல்கூடும்.[5] அங்ஙனம் வழங்கிய

---

[1] South Indian Inscriptions, Vol III, No. 73. [2] S.I.I., Vol III, No. 73. [3] S. I. I., Vol III, No. 2. [4] Ibid, No. 57. [5] பெரியபுராணம் என்று வழங்கும் திருத்தொண்டர்புராணம் பாடியருளிய புலவர்பெருமான் அருண்மொழித்தேவர், இயற்பெயரால் வழங்கப்பெறுமல் சேக்கிழார் என்னும் குடிப்பெயரால் வழங்கப்பெற்றுவருகின்றனர் என்பதும் அறியத்தக்கதாகும்.

நாளில் இவர் திருக்குறளுக்கு எழுதிய உரை, மணக்குடையாருரை என்று பெயர் எய்தியிருப்பதும் இயல்பேயாம். பிறகு இவர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதியகாலத்தில் துறவுபூண்டு சிறப்புற்றிருந்தமையின் இளம்பூரண அடிகள் என்று இயற்பெயராலேயே பாராட்டப்பெற்றிருத்தல்வேண்டும். எனவே, இளம்பூரணர் என்னும் இயற்பெயரும், மணக்குடையார் என்னும் குடிப்பெயரும் ஒருவரையே குறிப்பனவாகும்.

இனி, சில ஏட்டுப்பிரதிகளில் இவர்பெயர் மணக்குடையார் என்று குறிக்கப்பட்டுள்ளதாம். அன்றியும், திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மர்பெயர்கூறும் பழைய வெண்பாவிலும் மணக்குடையார் என்றும் பாடபேதம் காணப்படுகிறது. ஆனால், இந்நாளில் மணக்குடவர் என்னும் பெயர் வழங்குகின்றது; எனினும் மணக்குடையார் என்று வழங்குவதுதான் பொருத்தமுடையது என்பது உணரற்பாலதாகும்.

இனி, இளம்பூரண அடிகளது தொல்காப்பிய உரையையும் மணக்குடையாரது திருக்குறள் உரையையும் கூர்ந்து ஒப்புநோக்கிப் பார்த்தால் இரண்டுரைநடைகளும் ஒத்திருத்தலை யாவரும் எளிதில் அறியலாம். அன்றியும், தொல்காப்பியம்—புறத்திணையியலிலும் திருக்குறளிலும் ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, வெஃகாமை, அழுக்காறாமை என்பவற்றை விளக்கியுள்ள உரைநடைப்பகுதிகள் ஒன்றாகவே அமைந்திருப்பது அறியற்பாலதாகும். தீவினையச்சம், கள்ளுண்ணாமை, கொல்லாமை, கள்ளாமை, அருளுடைமை என்பவற்றின் விளக்கவுரைகளும் இரண்டிலும் பெரும்பாலும் ஒத்திருப்பதோடு உரைநடைப்போக்குவேறுபடாமல் ஒன்றாக அமைந்திருப்பதும் உணரத்தக்கது. அவ்வுண்மைகளை அடியிற் காண்க.

அதிகாரம்	இளம்பூரணர் உரை	மணக்குடையார் உரை
1 ஒழுக்கமுடைமை	ஒழுக்கமுடைமையாவது தம் குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஒத்த ஒழுக்கமுடையாதல்	ஒழுக்கமுடைமையாவது தம் குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஒத்த ஒழுக்கமுடையராதல்

2	நடுவு நிலைமை	நடுவுநிலைமையாவது பகைவர் மாட்டும் நட்டார்மாட்டும் ஒக்கநிற்கும் நிலைமை	நடுவுநிலைமையாவது நட்டார் மாட்டும் பகைவர்மாட்டும் ஒக்கநிற்கும் நிலைமை.
3	வெஃகாமை	வெஃகாமையாவது பிறர் பொருளை விரும்பாமை	வெஃகாமையாவது பிறர் பொருளை விரும்பாமை
4	தீவினையச்சம்	தீவினையச்சமாவது தீவினையைப் பிறர்க்குச்செய்தலையஞ்சுதல்	தீவினையச்சமாவது தீவினைகளைப்பிறர்க்குச்செய்யாமை
5	அழுக்காறாமை	அழுக்காறாமையாவது பிறராக்கம்முதலாயின கண்டு பொறாமையால்வரும் மனக்கோட்டத்தைச்செய்யாமை	அழுக்காறாமையாவது பிறராக்கம்முதலாயின கண்டு பொறாமையால் வருகின்ற மனக்கோட்டத்தைச் செய்யாமை
6	கள்ளுண்ணாமை	கள்ளுண்ணாமையாவது கள் உண்டலைத் தவிர்தல்	கள்ளுண்ணாமையாவது கள்ளுண்டலைத் தவிர வேண்டுமென்றுகூறுதல்
7	கொல்லாமை	கொல்லாமையாவது யாதொன்றையுங்கொல்லாமை	கொல்லாமையாவது யாதோருயிரையுங்கொல்லாமை
8	கள்ளாமை	கள்ளாமையாவது பிறர்க்குரியபொருளைக் களவினாற் கொள்ளாராதல்	கள்ளாமையாவது யாதொரு பொருளையுங் களவிற் கொள்ளாராதல்
9	அருளுடைமை	அருளுடைமையாவது யாதானும் ஒருயிர் இடர்ப்படுமிடத்துத் தன்னுயிர் வருந்தினாற்போல வருந்தும் ஈரமுடைமை	அருளுடைமையாவது யாதானும் ஒருயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்றதுன்பத்தினால்வருந்துமாறுபோல வருந்தும் ஈரமுடைமை

இதுகாறும் கூறியவாற்றால் திருக்குறளுக்கு இளம்பூரண அடிகள் எழுதிய உரை, மணக்குடையாருரையேயாதல்வேண்டும் என்பதும், அஃது இக்காலத்தில் மணக்குடவருரை என்று வழங்குகின்றது என்பதும், அங்ஙனம் வழங்குவது தவறு என்பதும் நன்குவிளங்குதல் காண்க.

ஸ்ரீ:

உதவிப்பத்திராசிரியர்குறிப்பு

திருவாளர் T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், இளம்பூரண அடிகளும் மணக்குடவரும் என்ற தலைப்புள்ள முந்திய கட்டுரையில் 'தண்கடலசைவளி' யென்றுதொடங்கும் ஒரு செய்யுளைத்தந்து, அதுகொண்டு,

க. 'தண்கடலசைவளி'யென்றுதொடங்குஞ்செய்யுள் தொல்காப்பிய இளம்பூரணருரைப்பாயிரமாகும்: என்றும்,

உ. அச்செய்யுளால் இளம்பூரணர் தொல்காப்பியத்துக்கு உரைவரைதற்குமுன்னரே கொங்குவேள்மாக்கதைக்குக் குறிப்புரையும் திருக்குறளுக்கு உரையும் எழுதிமுடித்துவிட்டனர் என்பது வெளியாகும்: என்றும்,

ங. இளம்பூரணர் என்பது இயற்பெயர், மணக்குடையர் அல்லது மணக்குடியுடையார் என்பது குடிப்பெயர்; மேற்குறித்த செய்யுளில் 'மணக்குடிபுரியான்' என்றுள்ளபகுதி இளம்பூரணரது குடிப்பெயரைக்குறிக்கும்; இளம்பூரணர் தொடக்கத்தில் மணக்குடையார் என்று தம் குடிப்பெயரால் வழங்கப்பெற்றிருத்தல் கூடும். அவர் துறவுபூண்டு சிறப்பெய்தியபின் இளம்பூரண அடிகள் என்று பாராட்டி வழங்கப்பெற்றிருத்தல்வேண்டும். எனவே மணக்குடையர், இளம்பூரணர், இளம்பூரண அடிகள் என்பன ஒருவரையே குறிக்கும். இளம்பூரணர் தம் குடிப்பெயரால் மணக்குடையர் என வழங்கப்பெற்றகாலத்து அவர் திருக்குறளுக்கு வரைந்த உரை மணக்குடையருரையென்று பெயரெய்தியிருப்பதியல்பேயாகும்: என்றும்,

ச. தொல்காப்பியப்பொருளதிகார இளம்பூரணர் உரையுள் புறத்திணையியலுரைப்பகுதிகள் சிலவும் திருக்குறள் மணக்குடவருரைப்பகுதிகள்சிலவும் ஒருபடியாக அமைந்திருத்தலால் அவ்வுரையிரண்டும் ஒருவரால் வரையப்பட்டனவாகும்: என்றும்

தாம் ஊகித்தறிந்த சில முடிபுகளை வெளியிட்டுள்ளார்கள்.

க. திரு. பண்டாரத்தாரவர்கள், தம் ஊகத்துக்கெல்லாம் மூலமான 'தண்கடலசைவளி' என்று தொடங்குஞ்செய்யுள் தமக்குக் கிடைத்தவரலாறென்றும் குறிக்கவில்லை.

அச்செய்யுள், திருநெல்வேலி இந்துகலாசாலைத் தமிழாசிரியரா யிருந்த த. மு. சொர்ணம்பிள்ளையவர்களால், சிற்றூராய்ச்சி என்ற தலைப்பின்கீழ்ப் பெயர்விழையான் என்று கைச்சாத்திட்டு, 1922ஆம் ஆண்டு நவம்பர்மீ செந்தமிழ் 20 ஆம் தொகுதியின் (12ஆம் பகுதியில்) ருOரு-ஆம் பக்கத்து முதன்முறை வெளியிடப்பட்டது.

அச்செய்யுளின்கீழ், அவர், "திருவருளால் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு உரையாசிரியருரை முற்றிய ஏடொன்று எனக்குச் சேந்தன்மங்கலத்திற் கிட்டிற்று. அதனை ஆராய்ந்து அச்சிற்கு இலக்காக்கி முடிக்கச் சென்னை ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் ஏற்று வெளிப்படுத்திவருகிறார்கள். அவ்வேட்டின் தலைப்பிற் பொறிக்கப்பட்டிருக்கும் இச்சிறப்புப்பாயிரத்தினால் ஆராய்ச்சியாளர் பலர்க்கும் பல உட்கோள் புலனும் என எண்ணி விரைந்து செந்தமிழ்க்கு அனுப்பலாயிற்று" என்று எழுதியுள்ளார்.

இவ்வாறு அவர் எழுதிவெளியிடுவதற்குமுன்னமே (1920-ஆம் ஆண்டிலே) சென்னைத் திருவாளர். கா. நமச்சிவாயமுதலியாரவர்கள், தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல் புறத்திணையியல்களை இளம்பூரணருரையுடன் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். அப்புத்தகத்தின் முகவுரையுள், திரு. முதலியாரவர்கள், அப்பதிப்புக்கு உதவியாயிருந்த இளம்பூரணருரைக்கையெழுத்துப் பிரதிகளுள் திரு. சொர்ணம்பிள்ளையவர்கள்பிரதியும் ஒன்றென்று குறித்ததுடன், அம் முகவுரையுள் இளம்பூரணரைப்பற்றி வரையுமிடத்துத் 'தொல்காப்பியநூற்கு முதற்கண் உரைகண்டார் இளம்பூரண அடிகள்' என்றிவ்வளவே எழுதியதன்றி, திரு. சொர்ணம்பிள்ளையவர்கள் தம்முடைய தொல்காப்பிய இளம்பூரணருரைப் பிரதியின் தலைப்பிலுள்ளதாகக்குறித்த 'தண்கடலசைவளி' என்று தொடங்கும் பாடலையேனும், அது கூறும் இளம்பூரணர் கொங்கு வேண்மாக்கதைக்குறிப்புரைகண்ட கதையையேனும், திருக்

குறளுரைகண்ட கதையையேனும் யாண்டும் ஒருசிறிதும் சுட்டவே யில்லை.

மேலும், செந்தமிழில் 'தண்கடலசைவளி' என்ற பாடல் வெளி வந்தபின் மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், கொங்குவேள்மாக்கதையாகிய பெருங் கதையை இருமுறை (1924-ஆம் ஆண்டிலும் 1935-ஆம் ஆண்டிலும்) நன்கு பரிசோதித்துத் தாம் நூதனமாக ஆராய்ந்துவரைந்த குறிப் புரையுடன் பதித்து வெளியிட்டுள்ளார்கள். அப்பெருங்கதைப் பதிப்பின் முகவுரையுள்ளும், தொல்காப்பிய இளம்பூரணருரைப் பாயிரமாகக் கூறப்படும் இச்செய்யுளைப்பற்றியும், இளம்பூரணர் கண்டதாக இச்செய்யுள்கூறும் கொங்குவேள்மாக்கதைக்குறிப் புரையைப்பற்றியும் ஒன்றுமே குறிக்கப்படவில்லை. 1927-ஆம் ஆண்டு திரு. நமச்சிவாயமுதலியாரவர்கள் அச்சிட்டு வெளியிட்ட தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணருரைப்புத்தகத்துள், 'இளம்பூரண அடிகள் உரைத்திறம்' என்ற பகுதியில், "இளம் பூரணரை இளம்பூரண அடிகள் என்றும் கூறுவது வழக்கு......... இவரை உரையாசிரியர் என்றே சிறப்பித்துக்கூறுவர். இவரைப் பற்றியசெய்தி வேறு யாதும் புலப்படவில்லை" என்றும் வரைந்துள்ளார் கள். முதலியாரவர்களேயன்றித் தொல்காப்பியத்தைப் பதிப்பித்த பிறரும் இளம்பூரணரைப்பற்றியெழுதுமிடத்து மேற்குறித்த பாடலையோ அதுகூறுங் கதைகளையோ குறிக்கவில்லை.

அன்றியும், 1933-ஆம் ஆண்டு வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் வெளியிட்ட தொல்காப்பியப் பொருளதிகாரத்துக் களவியல் கற் பியல் பொருளியல்களின் இளம்பூரணருரைப் புத்தகப்பதிப்புக்குக் கிடைத்த கையெழுத்துப்பிரதிகளுள் சொர்ணம்பிள்ளையவர்க ளுடைய இளம்பூரணருரைப்பிரதியும் ஒன்று என்று அப்புத்தகத் துப் பதிப்பாசிரியர்குறிப்பால் வெளியாகிறது. அதனுள்ளும் மேற் குறித்த பாடலைப்பற்றியேனும் அதுகூறும் கதைகளைப்பற்றியே னும் ஒன்றும் வரையப்படவில்லை.

சொர்ணம்பிள்ளையவர்களால் தம்முடைய தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணருரைப்பிரதியின் தலைப்பிலுள்ளதாகக்

கூறப்பட்ட மேற்குறித்த 'தண்கடலசைவளி' என்று தொடங்கும் செய்யுள், அவர்களுடைய தொல்காப்பியப் பொருளதிகார இளம் பூரணருரைப்பிரதியினையும் வைத்துக்கொண்டு ஆராய்ந்து தொல் காப்பியப் பொருளதிகார அகத்திணையியல் புறத்திணையியல்களை யும், களவியல் கற்பியல் பொருளியல்களையும் அச்சிட்டுவெளியிட்ட நமச்சிவாயமுதலியாரவர்களுக்கும் சிதம்பரம்பிள்ளையவர்களுக்கும் அகப்படாதிருக்கக் காரணம் இல்லை. அவர்கள் அச்செய்யுளைப் பற்றி ஒன்றும் எழுதாமையால், சொர்ணம்பிள்ளையவர்கள்பிரதியில் அச்செய்யுள் இல்லையென்று கொள்ளவேண்டியதாகிறது.

மேலும், வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் வெளியிட்ட தொல் காப்பியப் பொருளதிகாரக் களவியல் கற்பியல் பொருளியல்களின் இளம்பூரணருரைப்புத்தகத்துப் பதிப்பாசிரியர்குறிப்புள், அப் பதிப்பை வெளியிடுதற்குத ...பாகக் கிடைத்த தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணருரைப்பிரதிகளைக் குறிக்குமிடத்து, "இதனை வெளியிடுதற்குக் கிடைத்த கடிதப்பிரதிகளில் ஒன்று காலஞ்சென்ற த. மு. சொர்ணம்பிள்ளையவர்களுக்குரியதாகும். அவர் கள் பிரதிசெய்யும்பொழுது உரையில் இல்லாத பல சொற்றொடர்களை இடையிடையே பெய்திருக்கிறார்கள்................மூன்றாவதுபிரதி ஸ்ரீமான் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களுக்குரியது ....இதனையே த. மு. சொர்ணம்பிள்ளையவர்கள் இரவலாகப்பெற்றுத் தமக்குத்தோற்றியவாறு பல இடங்களில் மாற்றியும் கூட்டியும் பிரதி செய்துகொண்டார்கள்" என்று வரையப்பட்டுளது. இதனால், சொர்ணம்பிள்ளையவர்கள்பிரதி, திரு. எஸ். வையாபுரிப்பிள்ளையவர் கள்பிரதியைப்பார்த்து எழுதப்பட்டதென்று தெரிகிறது. திரு. வையாபுரிப்பிள்ளையவர்கள்பிரதியில், மேற்குறித்த (தண்கடலசை வளி என்ற முதற்குறிப்புள்ள) செய்யுள் இருந்திருப்பின் அவர்கள் அதனை விரிவாக ஆராய்ந்து வெளியிட்டிருப்பார்கள். அவர்களும் அச்செய்யுளைப்பற்றி ஒன்றும் எழுதிவெளியிடாமையால் அவர்கள் பிரதியிலும் அவர்கள் பிரதிக்கும் மூலமான திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள்பிரதியிலும் அச்செய்யுள் இல்லையென்றுகொள்ளக் கிடக்கிறது.

ஆகவே சொர்ணம்பிள்ளையவர்கள் தமதுபிரதியில் உள்ளதாகக் குறித்த செய்யுள், வரலாற்றுமுறையில் முன்னோர்களால் கொள்ளப்பெற்ற தொல்காப்பிய இளம்பூரணருரைப்பாயிரமான பழம் பாடலன்றென்றும், அது பழையசெய்யுளைப்போல இயற்றப்பட்டிருப்பினும், அதனுள் பழையசெய்யுளின் நடைநயமும் பொருணயமும் திருத்தமும் தெளிவும் முதலியவை காணப்படாமையால் அது புதிதாக இயற்றிச்சேர்க்கப்பட்டதொரு போலிச்செய்யுளென்றும் கொள்ளநிற்கிறது.

அச்செய்யுளைப் பழையபாடலாகவேகொண்டாலும், ஒரு சான்றுகொண்டே யாதொருமுடிபும் கொள்ளலாகாதென்பது தொன்னூற்றுணிபாதலால், அச்செய்யுளும் அதுகொண்டு ஊகித்துக்கண்ட முடிபுகளும் பிறசான்றுகள்காட்டி நிறுவவேண்டியனவாய்த் தோன்றுகின்றன.

2\. இனி இரண்டாவது முடிபு, மேற்குறித்த "தண்கடலசைவளி" என்று தொடங்கும் செய்யுளிலே,

"..........................தொல்காப்பியனுரை
முத்திறவோத்தினுக் கொத்தசீர்க் காண்டிகை
... ...
... ...
தலைகடை கூட்டித் தந்தனன் பண்டே
*கொங்குவேண் மாக்கதை குறிப்புரை கண்டோன்
தன்னறி யளவையில் நல்லுரை தேவர்
பன்மணிக் குறட்பான் மதிப்பிடப் பொறித்தோன்"

என்றுள்ள அடிகளால் ஊகித்துக்கொள்ளப்பட்டதாகும்.

மேற்குறித்த அடிகளுள், 'பண்டே' என்பது, பண்டாரத்தாரவர்கள் கருதுகிறபடி அதன்பின்னுள்ள அடிகளோடியைத்துப் பொருள்கொள்ளத்தக்கதாகமட்டும் நில்லாது, "காண்டிகை...... ......பண்டே தந்தனன்" என அதன்முன்னுள்ள அடிகளோடும்

---

*இவ்வடியுள், 'மாக்கதைகுறிப்புரை' என்றிருப்பது, 'மாக்கதைக்குறிப்புரை' என்றிருக்கவேண்டும்.

இயைத்துக்கொண்டு, கொங்குவேண்மாக்கதைக்குக் குறிப்புரையும், திருக்குறளுக்கு உரையும் எழுதுவதற்குமுன்னரே தொல்காப்பியத்துக்கு உரையெழுதிமுடித்துவிட்டனர் என்று பொருள் கொள்ளத்தக்கதாகவும் நிற்றலால், 'இளம்பூரணர் தொல்காப்பியத்துக்கு உரைவரைதற்குமுன்னரே கொங்குவேண்மாக்கதைக்குக் குறிப்புரையும் திருக்குறளுக்கு உரையும் எழுதிமுடித்துவிட்டனர் என்று ஒருதலையாகத் துணிதல் இயலாது.

௩. மணக்குடையர் என்பது அல்லது மணக்குடியுடையார் என்பது அந்தணர்க்குரிய ஒரு குடிப்பெயரென்றும், தொல்காப்பியவுரையாசிரியராகிய இளம்பூரணர் அக்குடியிற் பிறந்து மணக்குடையர் என்று அல்லது மணக்குடியுடையார் என்று வழங்கப்பட்டனர் என்றும் திரிபற்ற பிரசான்றுகொண்டு நிறுவினாலன்றி, மேற்குறித்தசெய்யுளில் †'மணக்குடிபுரியான்' என்றிருப்பதுமட்டும் கொண்டு, அது தொல்காப்பியவுரையாசிரியராகிய இளம்பூரணர், குடிப்பெயரென்றும், அக்குடிப்பெயரால் மணக்குடையார் என்று தொடக்கத்தில் இளம்பூரணர் வழங்கப்பெற்றனர் என்றும், இளம்பூரணர் மணக்குடையர் என்னும் இருபெயர்களும் ஒருவரையே சுட்டுமென்றும் கொள்ளல் இயலாது. பண்டாரத்தாரவர்கள் கருதுகிறபடி இளம்பூரணர் என்பது இயற்பெயர்; மணக்குடையர் என்பது குடிப்பெயர்; அவ்விரண்டும் ஒருவரையே குறிக்கும்: என்று கொண்டாலும், மக்களுள் ஒவ்வொருவரும் இயற்பெயரும் குடிப்பெயருமாகிய இரண்டுங்கொண்டு சுட்டப்படுதல் வழக்கில்லை. சில பெரியோர்களை அவரது பெருந்தகுதிகண்டு அவரது இயற்பெயராற் சுட்டாது குடிப்பெயரேகொண்டு வழங்குதலும், அவர் குடிப்பெயர்க்குப்பின் இயற்பெயரையிணைத்துவழங்குதலும் தோன்று

---

† இளம்பூரணர்குடிப்பெயரைச்சுட்டுவதாகக்கூறும் 'மணக்குடிபுரியான்' என்பது, செந்தமிழ் இருபதாம் தொகுதியின் ௫0௩-ஆம் பக்கத்தில் 'மணக்குடபுரியான்' என்று காணப்படுவதும் இங்கு ஆராயத்தகும்.

தொட்டுவரும் வழக்கே. அம்முறையில், 'இயற்பெயரால் இளம் பூரணர் என வழங்கப்பட்ட ஆசிரியர், பின் தம் பெருந்தகைமையால் குடிப்பெயர்கொண்டு மணக்குடையர் என்று தொடக்கத்தில் வழங்கப்பட்டார்; அக்காலத்து அவரியற்றிய திருக்குறளுரை மணக்குடையருரை என்று வழங்கப்பட்டது' எனின், பின்னர், அவர் துறவுபூண்டு சிறப்புற்றநிலையில் முன் வழக்கிலுள்ள மணக்குடையர் என்னும் குடிப்பெயரோடு துறவுபூண்டு சிறப்புற்றார்க்கிட்டுவழங்கும் அடிகள் என்பதனையிணைத்து மணக்குடையரடிகள் என்றும், அக்காலத்து அவரியற்றிய தொல்காப்பியவுரையும் மணக்குடையருரை என்றும் வழங்குதலன்றி, இளம்பூரணர் என்னும் பழைய இயற்பெயரோடு அடிகள் என்பதனையிணைத்து இளம்பூரண அடிகள் என்றும், இளம்பூரணருரையென்றும் வழங்கல் இயலாது. மேலும், ஓராசிரியரியற்றிய பலநூல்களுள், ஒரு நூல் அவ்வாசிரியர்க்குரிய ஒருபெயராலும் பிறிதொருநூல் அவ்வாசிரியர்க்குரிய பிறிதொருபெயராலும் வழங்குதல் யாண்டும் கண்டதில்லை. அன்றியும், மேற்குறித்த 'தண்கடலசைவளி' என்று தொடங்கும் செய்யுள் செந்தமிழில் வெளிவந்தபின் (2-4-1925ல்) திரு. கோ. வடிவேலுசெட்டியாரவர்கள் உதவிபெற்று, திரு. கா. பொன்னுசாமிநாட்டாரவர்கள் வெளியிட்ட திருக்குறள் மணக்குடவருரைப்பதிப்பின் முகவுரையுள், 'மணக்குடவரது ஊர், சாதி, மதம் முதலியவற்றுள் எதனையும் அறிவதற்கு எச்சாதனமும் கிடைக்கவில்லை' என்று எழுதியிருப்பதும் இங்கு நோக்கத்தகும். ஆதலால் இளம்பூரணர் மணக்குடையர் என்ற இருபெயர்களும் வேறுவேறு ஆசிரியரையே குறிக்குமென்றும், மணக்குடையர் என்பது இளம்பூரணரது குடிப்பெயராகாதென்றும் திருக்குறளுரை வரைந்த மணக்குடவர் அல்லது மணக்குடையர் தொல்காப்பியவுரை வரைந்த இளம்பூரணராகார் என்றும் கருதலாம்.

௪. தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணருரையுள் புறத்திணையியலுரைப்பகுதிகள் சிலவும் திருக்குறள் மணக்குடவ

ருரைப்பகுதிகள் சிலவும் ஒருபடியாக அமைந்திருத்தல்கொண்டு அவ்விருநூலுரைகளும் ஒருவராலியற்றப்பட்டனவென்பதும் அமையாது. 'முன்னோர் மொழிபொருளேயன்றி அவர்மொழியும் பொன்னேபோற் போற்று'வது புலவரியல்பாதலின், ஆதியுரையாசிரியராகிய இளம்பூரணருரைப்பகுதிகளை அவர்க்குப் பின்வந்த மணக்குடவர் தம் திருக்குறளுரையில் எடுத்தாண்டுகொண்டனர் என்னலும் கூடும்.

இதுகாறும் கூறியவாற்றால், மேற்குறித்த 'தண்கடலசைவளி' யென்றுதொடங்குஞ்செய்யுள், தொல்காப்பிய இளம்பூரணருரைப் பாயிரமாக வரலாற்றுமுறையின் வந்த பழம்பாடலன்றெனவும், எனவே அச்செய்யுளும் அதுகொண்டு ஊகித்துக்கண்ட முடிபுகளும் அமைவுடையவாகா எனவும், இளம்பூரணர் தொல்காப்பியத்துக்கு உரைவரையுமுன்னரே கொங்குவேண்மாக்கதைக்குக் குறிப்புரையும் திருக்குறளுக்கு உரையும் எழுதிமுடித்துவிட்டன ரெனல் ஏலாதெனவும், இளம்பூரணர் மணக்குடையர் என்றபெயர்களிரண்டும் ஒருவரையேகுறியாமல் வேறுவேறான ஆசிரியர் இருவரையே குறிக்குமெனவும், இளம்பூரணர் தொடக்கத்தில் மணக்குடையர் என்ற குடிப்பெயரால் வழங்கப்பட்டனரென்பது பொருந்தாதெனவும், திருக்குறளுக்குரைகண்ட மணக்குடவர் தொல்காப்பியவுரைகண்ட இளம்பூரணரை நன்குமதித்து அவருரைப்பகுதிகளைத் தம் திருக்குறளுரையுள் எடுத்தாண்டுகொண்டவராவர் எனவும் கொள்ளலாமென்று தோன்றுகிறது.

T. K. இராமாநுஜையங்கார்.

திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம்

திருவாளர் ராவ்ஸாஹிப், வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.

[கசஉ-ஆம்பக்கத் தொடர்ச்சி.]

திருஞானசம்பந்தர்வணக்கம்

மதுரேசர் திருநாட்டு வந்தசமண் கழுவேற மாறாச் சைவஞ்
சதுரேற மனுநீதி தழைத்தேறத் திருவேடு தமிழ்சேர் வைகை
எதிரேறத் தொண்டர்குழா மீடேறப் பரசமய விருள்விட் டோடக்
கதிரேறு மணிச்சிவிகை யேறினான் சரணமந்தக் கரணஞ் சேர்ப்பாம்.

மதுரேசர் - மதுரா (மதுரை) ஈசர் - சோமசுந்தரக்கடவுள். சமண் - சமணசமயம். சமண் கழுவேற என்பது 'சமணர் கழுவேற' என்பதைக் குறித்தது. சதுர் - சதிர் - பெருமை (தமிழகராதி). திரு - தெய்வத்தன்மை (தமிழகராதி). திரு எடு - (தேவாரப்பாடல் எழுதப்பெற்றுத்) தெய்வத் தன்மை படைத்த ஏடு. குழாம் - கூட்டம். ஈடேற - உய்வடைய. பரசமய இருள்விட்டோடக் கதிர் ஏறும் மணிச்சிவிகை ஏறினான் - அந்நிய மத (அஞ்ஞான) இருள் இருந்த இடம் தெரியாமலொழிய (ஞான)ப் பிரகாசம் மிகுந்த முத்துப்பல்லக்கில் ஏறினவனான ஞானசம்பந்தன்.

"இருள்விட்டோடக் கதிரேறும்" என்றும், "இருள்விட் டோடச் சிவிகை ஏறி(ப் பரமததிமிரபானு - அந்நிய மத இருள் நீக்கிய சைவ ஞானசூரியன் - ஆ)னான்" என்றும் பொருத்திப் பொருள்கொள்ளும்படி பாடியிருக்கும் நயம் ஊன்றி உணர்ந்து உவத்தற்குரியது. (6)

அவையடக்கம்

புகழ்தரு மறைக்கு மேலோன் புடார்ச்சுன புரத்தின் சீர்மை
நிகழ்தர நிகழ்த்த வல்லே னீகொலென் றெனது நெஞ்சே
இகழ்தர வெழுந்த நாணு மிச்சையுஞ் சினம்போ ராடி
அகழ்தர நாணந் தோற்ற தாசையே வென்ற தம்மா.

மறைக்குமேலோன் - சிவன். புடார்ச்சுனபுரம் - திருக்குற்றாலம். சீர்மை - சிறப்பு. நிகழ்தர - நிகழ - விளங்க (தமிழகராதி). நிகழ்த்த வல்லை நீகொல் - நீயோ சொல்லவல்லாய்? நெஞ்சே இகழ்தர - (என்) நெஞ்சே (என்னை) இகழ. அகழ்தல் - பிடுங்குதல் (தமிழகராதி). அகழ்தர நாணம் தோற்றது - வேரோடுபிடுங்கியெறியப்பட்டொழியும்படி (- சமூலமாக நாசமுறும்படி) நாணம் தோல்வியடைந்தது.

என்மனத்தில் திருக்குற்றாலத் தலபுராணத்தைப் பாட வேண்டுமென்ற ஆசையும் அதனைப் பாடுதற்குரிய வல்லமை யில்லையே யென்ற நாணமும் பலநாளாகப் போராடிக்கொண்டிருந் தன. முடிவில், "ஆசைக்கு ரோசம் (- ரோஷம் - வெட்கம்) இல்லை" என்ற பழமொழிப்படி, ஆசை வென்றது; நாணம் தோற் றது. அதனால் திருக்குற்றாலத்தலப்புராணத்தைப் பாடத்தகுதி யில்லாத நான் பாடினேனென்பது கருத்து. (7)

கவையடி விலங்கின் வல்லூன் கண்ணப்பன் கனிவா யேறி
அவிகளி னமிழ்தின் மிக்கா யமலனுக் கானாற் போலக்
குவிதரு நெறியோ னில்லேன் குறைமொழி நிறைசொன் மேலோர்
செவிபுகிற் றிரிகூ டத்துச் செல்வனுக் கினிய தாமால்.

அச்சிடப்பட்டிருக்கிற திருக்குற்றாலத் தலபுராணப் புத்தகங்களில், 'கவையடி' என்று தொடங்கும் இப்பாட்டில், 'வல்லூண் .... அமிழ்தின் மிக்கா' என்று பாடம் காணப்படுகிறது. 'ஊன்' என்பது 'ஊண்' எனவும், 'அமிழ்தின்மிக்காய்' என்பது 'அமிழ்தின்மிக்கா' எனவும் எழுது வோரால் மாற்றியெழுதப்பட்டிருக்கலாம்போலும். *

கவை - பிளவு. விலங்கு - மிருகம். கவையடி விலங்கு -(பிளவுபடாத குதிரை கழுதைகளின் குளம்புபோலன்றி ஆடுமாடுகளின் குளம்புபோலப்) பிளவுபட்டகுளம்புகளையுடைய (பன்றியென்ற) மிருகம். ஊன்- மாமிசம். அவிகளின் மிக்காய் - வேள்வித்தீயில் தேவர்க்குக்கொடுக்கும் உணவினும் மிக்க (சுவையுடைய)தாய். அவிகளின் என்பதில் கள் அசை (தமிழ்ச் சொல்லகராதி). குவிதருநெறி - ஒருமுகப்பட்ட ஒழுக்கம்.

---

* மேற்குறித்த 'கவையடி' என்ற பாட்டில், 'வல்லூண்.........அமிழ் தின்மிக்கா' என்ற அச்சுப்புத்தகப்பாடத்தைநீக்கி, 'வல்லூன்.........அமிழ் தின்மிக்காய்' என்று இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்து ஏட்டுப்பிரதிகளிலுள்ள பாடங்கொண்டு பதிக்கலாயிற்று. [பத்திராசிரியர்]

இழிவான மாமிசம் கண்ணப்பநாயனர்வாய்க்கொண்டதனல், சிவபிரானுக்கு அவியினும் அமிழ்தினும் மிக்க சுவையுடையதானது போலச் சொல்வன்மை குறைந்த எனது நூல் (திருக்குற்ருலத்தல புராணம், அது அரங்கேறப்பெற்ற), இந்த வித்துவசபையில் அமர்ந்து கேட்கும் சொல்வன்மைநிறைந்த பெரியோருடைய செவி வாயிற்சேர்தலால், திருக்குற்ருலநாதருக்கு அமுதம்போல இனிய தாகுமென்பது கருத்து. (8)

திருநதிச்சருக்கம்

தேர்கொண்ட வசந்த வீதிச் சிவபிரான் றிருவெண் ணீற்றின்
ஏர்கொண்ட வடியார் சங்க மெனப்பரந் தேகி வேலை
நீர்கொண்டு தன்பால் வெண்பா னிறங்கொண்டு தரங்க மேகக்
கார்கொண்ட கடலின் மேனி கைக்கொண்டு மீண்ட மேகம்.

தேர்கொண்டவசந்தவீதி - (திருக்குற்ருலநகரிலே) தேர்த்திருவிழா நிகழ்தலையுடைய வசந்தவீதியில். ஏர் - அழகு. சங்கம் - கூட்டம். வேலை நீர் - சமுத்திரசலம். தரங்கம் - அலை. மேனி - நிறம் (தமிழகராதி).

திருக்குற்ருலநகரத்திலே தேர்த்திருவிழாநிகழும் வசந்தவீதியிலே, திருவெண்ணீற்றினை மேனிமுழுதும் உத்தூளனமாகப்பூசிய சிவனடியார்கூட்டம் செல்வதுபோல, வானவீதியிலே வெள்ளை மேகம் சென்று கடலையடைந்து கடல்நீரைவாங்கித் தன் வெண்ணிறத்தை அலைகள்கொண்டுபோகவிட்டுக் கடலின் கருநிறத்தைத் தான்கொண்டு, (கார்காலத்தொடக்கத்திலே தான்புறப்பட்ட இடமாகிய திரிகூடமலைக்குத்)திரும்பியது என்பது கருத்து.

மேலேகூறியது கவிமரபுபற்றிக் கூறப்பட்டது. கடல் முதலிய நீர்நிலைகளிலுள்ள நீர் ஆவியாகமாறி மேகமாகிறதென்பது விஞ்ஞானநூல்களால் விளங்கும் உண்மை. (9)

மொய்யலைத்தெண் டிரைக்கடன்மேல் வானீட்டி முதுதரைமேற் படிவங் [காட்டிச்
சையமுடி தொடுத்தனந்த மணிமுடிகள் கவித்ததலை யருவி மேனள்
வையகந்தாங் கியசேடன் வானகந்தாங் குறநிமிர்ந்த வகையா மன்றி
வெய்யமருத் துடனிகலி மேருவின்மேன் முடிகவித்த விசைய மாமால்.

மொய் அலைத் தெண் திரைக் கடல்மேல் - நெருங்கிய அலைதலையுடைய தெளிவான அலைகளையுடைய கடலிடத்தில். முதுதரை - பழமையான பூமி. படிவம் - உடம்பு. சையமுடி - மலையுச்சி. மேனுள் - முன்னுள். வையகம் - பூமி. சேடன்- ஆதிசேடன். வெய்ய - கொடிய. மருத்து - வாயு; காற்றுக்கு அதிதேவதையான வாயுதேவனைக் குறித்தது. இகலுதல் - மாறுபடுதல், போட்டிபோடுதல். விசையம் - விசயம் - வெற்றி.

கடலிலே வாலைநீட்டிப் பூமியிலே உடம்பைக்கிடத்தி மலையுச்சியிலே படம்விரித்த தலையை உயர்த்திப் படியவைத்துக்கொண்டு எஞ்சிய படப்பகுதியை மலையின்முன்பக்கத்திலே சார்த்திய பாம்புபோல விளங்கும் நதியின் தோற்றம், முன் பூமியைத் தலைமேற் சுமந்துகொண்டிருந்த ஆதிசேடனென நாகம், இப்போது ஆகாயத்தைத் தாங்குதற்குத் தன் விரிந்த படத்தோடுகூடிய தலையை நிமிர்த்தியுள்ள காட்சியைப்போலும்; அன்றியும், அந்த ஆதிசேடனும் வாயுதேவனும் தம்முள் யார் மிக்கவலிமையுடையவரென்பதை முடிவுசெய்தற்காக, ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளால் மகாமேரு மலையின் ஆயிரம் கொடுமுடிகளையும் பொத்திக்கொள்ள, அவ்வாறு பொத்தப்பட்டுள்ள கொடுமுடிகளில் ஒன்றையோ பலவற்றையோ வாயுதேவன் தன் பலமுழுவதையுங்கொண்டு வீசித் தாக்கிப் பறித்தெறிந்துவிட்டால் வாயுதேவன் அதிக பலசாலியென்றும், அவ்வாறுசெய்யமுடியவில்லையானுல் ஆதிசேடன் அதிகபலசாலியென்றும் சபதஞ்செய்துகொண்டகாலத்தில், ஆதிசேடன் மேருமலையுச்சியைத் தலையால் அழுத்திக்கிடந்த காட்சியையும் ஒத்து விளங்கியதென்பது கருத்து.

மலையிலேதோன்றிப் பூமியிலே நீளமாக நெளிந்தோடிக் கடலிலேபோய்ச்சேரும் ஆறு ஆதிசேடன் வானத்தைத் தாங்கநிமிர்ந்தாற்போலவும், மேருமலைச்சிகரத்தைப் படங்கொண்டு பொத்தினுற்போலவும் இருந்ததென்பதனினும் சிறப்பாக வேறு உவமை கூறுதல் இயலாதென்பது மிகையாகாது. (10)

[தொடரும்]

௳

குமரகுருபரர்

திருவாளர். வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.

முன்னுரை

அமிழ்தினு மினிய தமிழ்மொழி, மூவேந்தரும் முச்சங்கமும் வள்ளல்களும் மறைந்தபின்னர்த் தமிழகம் பிறமொழியாளரின் ஆட்சியிற்பட்டுப் பேணுவாரின்றிக்கிடந்த சமயத்தில், அதனைப் பேணிப் பாவேந்தரை ஆதரிக்க முன்வந்தவை சைவமடாலயங்களாம். இடையே பல்லாண்டுகள் ஏனோ தானோ என்றிருந்த மடாலயத்தார் சில்லாண்டுகளாகப் பின்னும் தமிழைப்பேண முன்வந்தமை தமிழகத்தின் நன்மைக்கு அறிகுறியாய் மகிழ்தற்குரிய செய்தியாகும். அத்தகைய மடாலயங்களில் ஒன்றை நிறுவுவதற்குக் காரணமாயிருந்த பெரியார் குமாரகுருபரர்.

குமாரகுருபரர் ஒரு நல்லிசைப்புலவர்; சித்தாந்த ஞான அநுபூதி பெற்ற சீவன்முத்தர்; மன்னர் வணங்கி வழங்கிய பெருநிதிக் குவியலால் தமிழும் சைவமும் தழைத்து வளர்தற்கேற்ற வழி கண்ட வள்ளலார்.

வரலாற்றுச் சுருக்கம்

சங்கப்பனுவல்களிற் புகழ்ந்துபேசப்படும் பொருநை (தாம்பிரபர்ணி)யாற்றின் வடகரையில் ஸ்ரீவைகுண்டம் என்னும் பதியின் வடபாலுள்ள கைலாசபுரம் என்னும் பதியில் வாழ்ந்த சைவவேளாளராகிய சண்முகசிகாமணிக்கவிராயரும் அவரது அரும்பெறற் கற்பின்மிக்க வாழ்க்கைத் துணிவியாரான சிவகாமியம்மையாரும் செய்த தவப்பேறாகச் செந்திலாண்டவன் திருவருளால் நம் குமாரகுருபரர் தோன்றினர்.

இவர் ஐந்தாண்டுவரை மூங்கையராய் இருந்தார். அதுகண்டு பெற்றோர் கவன்று, தம் மைந்தரைத் திருச்செந்தூருக்குக் கொண்டு

சென்று செந்திலதிபன் திருமுன்னர்க் கிடத்தித் தாமும் பாடு கிடந்தனர். அப்பெருமான் அருளால் குழந்தையார் ஓதாதுணர்ந்த செந்நாப்புலவரானர். உடனே கந்தர்கலிவெண்பா என்ற அரிய பிரபந்தத்தைப் பாடினர்.

இறைவன் திருவருளாலும் பண்டைத்தவத்தின் பயனாலும் விரைவில் இலக்கண இலக்கியங்களையும் ஞானநூல்களையும் ஓதியும் உணர்ந்தார்; அரும்புக்கு மணம் இயல்பில் அமைந்து உரிய காலத்து விரிந்து பரவுவதுபோலப் பத்தி ஞான வைராக்கியங்கள் இவர்பால் தோன்றி வளரலாயின. இவர் சிவதலயாத்திரையாகப் புறப்பட்டு, மீனாட்சியம்மைதிறத்துப் பிள்ளைத்தமிழொன்று பாடிவந்தனர். மீனாட்சியம்மையார் கனவில் எழுந்தருளிக் கட்டளையிட்டபடி திருமலைநாயக்கன் என்னும் வேந்தன், குமரகுருபரரைத் தக்க மரியாதையுடன் எதிர்கொண்டு வரவேற்றுத் திருக்கோயிலில் அந்தப் பிள்ளைத்தமிழை அரங்கேற்றுவித்தான். அதுகாலை அம்மை அருச்சகரின் பெண்மகவாகக் கோலங்கொண்டு அரசன் மடிமேல் வீற்றிருந்து பிரபந்தத்தைக் கேட்டருளினள் எனவும், முத்தப்பருவம் அரங்கேறுகையில் தன் திருக்கழுத்திலிருந்த முத்தமாலையை இவருக்குப் புனைந்தருளினள் எனவும் கூறுவர். மதுரையிலே பின்னும் சின்னாள் தங்கியிருந்து மதுரைக்கலம்பகம் பாடி அரங்கேற்றினர். மதுரையில் வாழுங்கால் மதுரைமன்னனாகிய திருமலைநாயக்கன் அரசியலலுவல்களின் மிகுதியால் நெடுநேரம் உணவின்றியிருந்தமை அறிந்த இவர், "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தலரிது" என்ற குறளைக் கூறி, அதன் பொருளையும் விரித்துரைக்கக்கேட்ட மன்னன் திருக்குறளின்பெருமையை உணர்ந்து அதன்கருத்துக்களைச் சுருங்கிய நூலொன்றில் அமைத்துப் பாடித்தரவேண்டினனாக நீதிநெறிவிளக்கம் பாடியருளினர். இவரதுபெருமையையுணர்ந்த மன்னன் இவருக்குக் கனகாபிடேகம் செய்வித்தான்.

பின் இவர் திருவாரூருக்குச்சென்று தங்கியிருந்தபோது திருவாரூர்நான்மணிமாலை பாடினார்; சிவஞான உபதேசம் பெற வேண்டும் என்ற வேட்கை மீதூறலாயினர்; ஞானதேசிகரை நாடலாயினர்.

இவ்வாறிருக்க; திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் நான்காம்பட்டத்திலே குருமூர்த்தியாக விளங்கிய திரு.மாசிலாமணிதேசிகரை ஒருநாள் இவர் தரிசித்தார். தேசிகர் இவர்பால் அளவளாவியிருக்கும்போது பெரியபுராணத்திலுள்ள "ஐந்துபேரறிவும்" என்ற திருப்பாட்டின் அநுபவப்பொருள் யாதென வினவ, திருவருட்செயலால் அதன்பொருள் கூறமாட்டாது, இவர் திகைத்துத் தம் மேலாடையை எடுத்து இடுப்பிற்கட்டிக்கொண்டு, தேசிகரது திருவடியில் வீழ்ந்து தமக்கு அருள்புரியுமாறும், துறவுநிலை தரவும் வேண்டினர். ஆதீனமரபின்படி சிவதலயாத்திரைசெய்து காசியைக்கண்டு அதன்கண் ஓராண்டு வாழ்ந்திருந்து வரும்படி தேசிகர் கட்டளையிட்டனர். காசிக்குச்சென்று வர நெடுங்காலம் செல்லுமே என்று இவர் கவன்றமை அறிந்த தேசிகர் சிதம்பரத்திலேனும் சிலகாலம் வாழ்ந்துவரும்படி பணித்தனர்.

ஞானாசிரியர் கட்டளைப்படி சிதம்பரத்துக்குச்செல்லுங்கால் இவர் வழியில் வைத்தீசுவரன்கோயிலைத்தரிசித்து ஆண்டெழுந்தருளியிருக்கும் முத்துக்குமாரசாமிக்கு ஒரு பிள்ளைத்தமிழ்பாடியருளினார்; சிதம்பரம் சென்று கூத்தப்பெருமான் திருநடம் கும்பிட்டு அப்பதியிற் சிலகாலம் தங்கினார்; அங்கே சிதம்பரமும்மணிக்கோவை இயற்றியருளினார். இவரது இளமையையும் கவியியற்றும் திறமையின் பெருமையையும் கண்டு அழுக்காறுற்ற சிலர், 'இவர் வரகவிதானே, இலக்கணக்கவியல்லரோ?' எனக் குறிப்பாய் இகழ்ந்து கூறக்கேட்ட சிலரது வேண்டுகோளின்படி, யாப்பிலக்கண அமைதியனைத்திற்கும் எடுத்துக்காட்டுக்கள் அமையச் சிதம்பரச்செய்யுட்கோவையை இயற்றியருளினார்.

இவர் மீண்டும் தருமபுரம் சென்று ஞானாசிரியர்பால் துறவு நிலைபெற்றுக் கல்லாடையுடுத்துக் காசிக்குப் புறப்பட்டுச்சென்றார்; சகலகலாவல்லிமாலை பாடிக் கலைமகளின் கருணையால் இந்துஸ்தானி மொழியிலும் வல்லவராகி, அம்மொழியின் வல்லமையால் டில்லி பாதுஷாவின் உள்ளத்தைக் கவர்ந்தார். பாதுஷா இவரது விருப்பிற்கிணங்கிக் காசியில் இவர் இருப்பதற்குத் திருமடம் அமைக்கக் கேதாரகட்டத்தில் இடம் கொடுத்தார். இவர் அங்கு வாழ்ந்து வருகையில் முகம்மதியர்களால் நெடுங்காலம் மறைக்கப்பட்டிருந்த விசுவலிங்கப்பெருமானை வெளிப்படுத்திச் சைவாகமமுறையில் நித்தியநைமித்திகங்கள் நடைபெற நிபந்தம் அமைத்தருளினார்; காசியில் இவர் வாழ்ந்த மடத்துக்குக் குமாரசாமிமடம் என்று பெயர். காசியில் துண்டிவிநாயகர்பதிகமும் காசிக்கலம்பகமும் பாடினார். புராணசாலை ஒன்று அமைத்து அதன்கண் இந்துஸ்தானியிலும் தமிழிலும் புராணப்பிரசங்கங்கள் நிகழ்த்தினார். சிறந்த இராமபத்தரும் இந்தியில் இராமாயணம் இயற்றியவரும் ஆகிய துளசிதாசரும் இவரது பிரசங்கங்களைக் கேட்கும் பேறு பெற்றதன்றிக் கம்பராமாயணக்கருத்துக்கள் பலவற்றைத் தாம் இயற்றிய இராமாயணத்தில் அமைத்துக்கொள்ளவும் பெற்றார் என்பர்.

இவர் பாதுஷாவின் முன்னிலையில் சிங்கத்தின்மீதேறிச் சென்றதாகவும், முகம்மதியர் பலர் இவர்மேற்கொண்டிருந்த அழுக்காறும் பகைமையும் தீரும்படி பல அற்புதங்கள் நிகழ்த்தியதாகவும் கூறுவர்.

இவர் மீண்டும் ஒருமுறை தருமபுரம்வந்து ஞானாசிரியரைத் தரிசித்து மீட்டும் காசிக்கேகி வாழ்ந்து ஒரு வைகாசிமாதம் கிருஷ்ணபக்ஷத்திருதியையில் சிவபெருமான் திருவடிநிழலடைந்தார்.

இயற்றிய நூல்கள்

இனி, இவர் இயற்றியருளிய நூல்களைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

அடிகள் கந்தர்கலிவெண்பா, இரண்டு பிள்ளைத்தமிழ்கள், இரண்டு கலம்பகங்கள், நான்மணிமாலை ஒன்று, மும்மணிக்கோவை இரண்டு, செய்யுட்கோவை ஒன்று, மாலை ஒன்று, நீதிநூலொன்று ஆகப் பதினொருபிரபந்தங்கள் பாடியுள்ளார். மீனாட்சியம்மையிரட்டைமணிமாலை, மீனாட்சியம்மைகுறம், தில்லைச் சிவகாமியம்மையிரட்டைமணிமாலை என்பன இவர்வாக்கல்ல என்பது சிலர் கருத்து. காசித் துண்டிவிநாயகர்பதிகம் கிடைக்கவில்லை. விநாயகர் கொத்து என்ற பனுவற்றிரட்டிற் காணப்படும் துண்டிவிநாயகர் பதிகம் அடிகள் இயற்றியதோ என்பது ஆராயற்பாற்று.

தமிழன்பு

தமிழில் ஒருசிறிது புலமைவாய்ப்பினும் தமிழருக்குத் தமிழ்ப் பற்றுமிகுதல் இயல்பேயென்றால் நல்லிசைப்புலவராகிய இவரது தமிழ்ப்பற்று இத்தகையதென எடுத்துரைக்க இயலுமோ? தமிழைக்கூறுமிடமெல்லாம், ஏதேனும் அடைகொடுத்தேகூறுவது இவரது இயல்பு. எடுத்துக்காட்டாக வண்டமிழ், தண்டமிழ், கொழிதமிழ், சங்கத்தமிழ், இசைமுத்தமிழ், பசுந்தமிழ் என்பன காண்க. மீனாட்சியம்மையை 'நறைபழுத்த துறைத்தீந்தமிழின்... சுவையே' எனவும், இறைவனைச் 'சங்கம் பொங்கும் பண்முத்தமிழ்க் கோர்பயனே' (மதுரைக்கலம்பகம்) என்றும் அழைக்கின்றார்.

'உலகமுழுதும் ஈன்ற அம்மை தடாதகையெனவும், தனிமுதலாகிய இறைவன் சவுந்தரபாண்டியன் எனவும், முருகவேள் உக்கிரகுமாரனெனவும் மதுரையில் எழுந்தருளியிருந்து ஆண்டது தமிழின்சுவையைக்கொள்ளைகொண்டுண்ணவே என்றால், தமிழின் பெருமையை யாரறிவார்' என்றபொருள்படும்படி, "தமரநீர்ப்புவனம்....யாரறிவார்" என்றபாடலிற் கூறியமை பாராட்டற்பாலது.

நீதிநெறிவிளக்கம்

நீதிநெறிவிளக்கம் திருக்குறளின் சாரமானது. நூறுசெய்யுட்கள்கொண்ட அந்நூலின் கடவுள்வாழ்த்துநீங்க, முதல் இருபத்தைந்துசெய்யுட்களிற் கல்வியைப்பற்றியே கூறியிருப்பதினின்று இவர்க்குக் கல்வியில் இருந்த ஆர்வம் புலனும். 'கல்வியே கற்புடைப் பெண்டிர்' என்ற செய்யுளால், கல்வியே ஒருவர்க்கு மனைவி; இனிய கவித்துவமே செல்வப்புதல்வன்' என்கின்றார். இவை இருப்பினும், வாழ்க்கை சிறப்புடையதாவதற்குப் பாடங்கூறும்வன்மை சொல்வன்மை என்ற செல்வங்களும் அமைதல்வேண்டும் என்று கூறியுள்ளது எத்தனை பொருத்தமாகவும் அழகாகவும் உள்ளது.

ஈகையின் இலக்கணங்கூறுங்கால் ஈவாரைக் கற்பகமாகவும், அவரது கண்ணேக்கு அரும்பாகவும், நகைமுகமே புதுமலராகவும், இனிய வாய்மொழியே இனிய காயாகவும் கூறியது பாராட்டற்பாலது. இத்தகைய பண்புடையாரே கற்பகதரு என்ற குறிப்பால் விண்ணுலகத்துள்ள கற்பகம் கற்பகமன்று எனவும் தோற்றும்.

வள்ளுவர் துறவறவியலிற்கூறிய பல திருக்குறள்களின்சாரமாக இவர், 'முற்றத்துறந்த ஒருவன் கற்றுவல்லகணவன், மெய்யுணர்வு கற்புடையமனைவி, மெய்யுணர்விற்றேன்றும் இன்பமே மகன், இம்மகனுல்வரும் இன்பமேயொழிய மற்றவையெல்லாம் துன்பமே' என்று பொருள்படும்படி 'கற்றுத்துறைபோய' என்ற செய்யுளிற் கூறியுள்ளார்.

மனிதவாழ்க்கையின் குறிக்கோளை இன்னதெனக் 'கற்றுங் கறிந்து' என்ற பாடலிற் கூறுகிறார். 'கற்பனகற்று, அதன்படி அடங்கித் தீமைநீக்கி, நல்லனசெய்து, போதும் என்ற மனம் உடையராய்ப் பற்றற்குரிய பரம்பொருளையேபற்றித் தற்போதம் அற வாழ்பவரே அழியாதநெறியில் நிற்பவர்' என்பது அதன் கருத்து.

சிதம்பரச்செய்யுட்கோவை.

இவர் எவ்வகை யாப்பிலும் வல்லவர் என்பது, இவரது பல பிரபந்தங்களாலும் அறியலாம். சிதம்பரச்செய்யுட்கோவை சிறந்த சான்று.

உளப்பாங்கு

இவர், திருமலைநாயக்கர்முதலிய மன்னரும் மதிக்கும் நிலையில் இருப்பினும் ஒன்றினும் பற்றற்ற உள்ளம் உள்ளவர். இதனை, சிதம்பர மும்மணிக்கோவை எட்டாம்செய்யுளில், 'எம்பெருமானே! எனக்கு வரம் ஒன்று ஈந்தருளல்வேண்டும். அதாவது:- பெருங்குளிரால் வருந்தியபோது கந்தைத்துணியன்றி வேறொன்றும் கிடையாதாகுக; வறுமனையின் புறந்திண்ணையல்லது வேறு இடம் கிடையாது ஒழிக; பசிக்கு உப்பில்லாத கூழன்றிப் புலம்பினும் வேறுகிடையாதொழிக; என்றும் ஒழுக்கம் நிறைந்தவரும் பெருங்கேள்வியாளருமாகிய மாதவர்கூட்டத்தே நான் வைகுக; நின் திருவடியேயன்றி வேறொருபதவியை நான் வேண்டினும் ஈயற்க' என்று வேண்டுதலால் அறியலாம்.

சைவசித்தாந்தக்கருத்துக்கள்

சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தக்க உவமை உருவகம் முதலியவற்றில் அமைத்துச்சொல்லுந்திறம் இவர்பாற் சிறந்து காணப்படுகிறது. பண்டாரமும்மணிக்கோவை 11-ஆம் செய்யுளில் மாசிலாமணிதேசிகரை உழவராகவும், மாயையை நாடாகவும், நால்வகைப்பிறவியை வாய்க்கால்களாகவும், எண்பத்துநான்கு லட்சம் பிறவியின்பிரிவுகளை வயல்களாகவும், உயிர்களைப் பயிர்களாகவும், ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் ஆதியாத்மிகம் என்பவற்றை மும்மலமாகவும், போகங்களைப் புனலாகவும், ஐம்பொறிகளை மடையாகவும், ஊழைப் பருவமாகவும், அத்துவாக்களை வரிகளாகவும், மூவகைவினைகளை விளைவாகவும் உருவகித்துக்கூறிய சதுரப்பாடு போற்றற்குரியது. இது வினைவிளைக்குந்திறம்.

இனி இத்திருப்பாட்டிலேயே அருள்விளைவிக்குந்திறம் கூறுகிறார். அதில் சுத்தமாயை - வயல், அருள் - வித்து, கருணை - நீர், இவ்வயலில் வேதம் - மரம், அதிலே தோன்றும் கிளைகள் - சமயங்களும் அவற்றின் கதிகளும், மரத்தில் தோன்றும் இலை

முதலியவை பயன். பலர் இலை முதலியவற்றைப் பயனாகக்கொண்டு மகிழ்ந்தனர். சிலரே அத்தருவின் உச்சியாகிய வேதாந்தத்திற் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்த சாரமாகிய சைவசித்தாந்தம் அருந்தினர் என்கிறார்.

அறிவோட்பம்

இவர் உலகஇயல்புமுதலியவற்றை நன்றாக அறிந்தவர் என்பதற்குப் பலசான்றுகள், இவர் இயற்றிய குறம் கலம்பகம் என்னும் நூல்களிற் காணலாம். அவற்றை ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இத்தகை நல்லிசைப்புலவரும் சைவப்பெரியாரும் தமிழ் வளர்த்த வள்ளலுமாகிய இவர் இயற்றிய நூலைப் பல்காலும் பயின்று பிறர்க்கும் எடுத்துரைத்து மகிழ்வது, தமிழர்க்கும் சைவர்க்கும் தலையாய கடனாம்.

1945-ஆு செப்டம்பர்மீ 27உ (பார்த்திப-ஆு-புரட்டாசிமீ 11உ)
மாலை 6-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்
காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.
—உப-அக்கிராசனாதிபதி.
2. ,, ராவ்பஹதூர் P. ரங்கஸ்வாமிநாயுடுகாரு.
3. ,, மதுரமித்திரன் ந. சுப்பிரமணியம் அவர்கள்.
4. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
—காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. சங்கமாபீசு வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2. பத்தமடை ஜனாப் K. M. பீர்முகம்மதுபாவலர் அவர்களைச் சங்கத்தின் அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

8372

3. மதுரை M. R. C. C. Bankல் Fixed Deposit-ல் இரண்டு வருஷங்கட்கு ரூ. 5000, வருஷம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு 3 வட்டிக்குப் புதிதாகப்போட்டுவைத்திருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

ஷை பாங்கில் வட்டிக்குக்கொடுத்துள்ள Fixed Deposit தொகைகளாகிய ரூ. 1050, ரூ. 1001 இவற்றை ஷை பாங்கிலேயே ஒவ்வொன்றையும் மறுபடியும் இரண்டு வருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு 3 வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

4. ஆபீஸ் பியூன் S. சோமசுந்தரம்பிள்ளை சீக்கினால் ரஜாவிலிருந்த காலத்துக்குரிய சம்பளம் ரூ. 5—7—9யும் அவனுக்குக் கொடுத்திருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

5. செந்தமிழ்ப்பிரசுரமாகிய திருத்தணிகைத் திருவிருத்தம் உரையுடன் அச்சிடுவதுசம்பந்தமாக ஸ்ரீ. S. கலியாணசுந்தரமையரவர்கள் எழுதிய விஷயத்தைப்பற்றிய ஆலோசனைகளைத் தள்ளிவைக்கலாயிற்று.

6. புதுக்கோட்டை மஹாராஜா அவர்கள்காலேஜுக்கு அனுப்பிய யோக்கியதாபத்திரங்கள் கிடைக்கவில்லையென்றுதெரிவதால் நகல் (duplicate certificate) தயாரித்து, கனம் அக்கிராசனாதிபதியவர்களின் கையெழுத்துடன் அனுப்பிவைக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

7. சங்கமாபீசு வரவுசெலவுகணக்குகளைப் பரிசீலனைசெய்யும்படி மதுரை ஹைகோர்ட்டுவக்கீல் R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் B.A., B.L., அவர்களை அவசியமானபோது கேட்டுக்கொள்ளலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
27—9—'45.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராசனாதிபதி.

உ

ஏரெழுபது

[திரு. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள்]

முன்னுரை

ஏரெழுபது என்னும் நூல் ஏரின்சிறப்பை எழுபதுபாட்டாற் கூறுவது. இதனுள் ஏர் என்பது கலப்பையையும் அதுகொண்டுசெய்யும் உழவுதொழிலையும் குறிக்கும். எழுபது என்பது எழுபதுபாட்டாலாகிய நூலுக்கு ஆகுபெயர். இதனையியற்றியவர் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் என்பர். இந்நூலுள் கலப்பை, மேழி, ஆணி, நுகம், நுகத்தொளை, பகடு முதலிய உறுப்புக்களின் சிறப்புக்கள் கூறப்பெற்றிருப்பது படிப்போருள்ளத்தைக் கவரும் அழகுடையதாகும். நொய்யபொருள்களை மிகுசிறப்பினவாக ஏதுக்காட்டிக் கூறுவதிலே கம்பர் இயல்பாகவே திறமைசான்றவர் என்பது அவரது இராமாயணத்தாலும் நன்கு விளங்கற்பாலது. உழவுநாட்கோள், தெய்வம்பராவல் முதலிய உழவர்வழக்குக்களும் உழவர்சிறப்பும் காவிரிச்சிறப்பும் இச்சின்னூலின்கண் பொன்னூலின் மணிகளென்னுமபடி கோக்கப்பெற்றுள்ளன. இந்நூலின் நடை சிறிதுகற்றார்க்கும் பயன்படத்தக்க எளிமையின் ஒழுகுவது. இடையிடையே வடசொற்கள் பயின்றுவந்துள்ளன. சொற்சுவை பொருட்சுவை மலிந்து பலவகையணிகளும் பொலிந்துமிளிரும் இந்நூலினை மாணவர்கள் தொடக்கத்திற்பயிலும் நூல்களுள் ஒன்றாக்கொள்ளுதல் தகும். இந்நூலைக்கற்பதால் உலகியலறிவும் மொழியறிவும் மாணவர்க்கு எளிதில் வாய்க்குமென்பது ஒருதலை.

மங்கலம்

எந்நூலுரைப்பினும் அந்நூற்கு மங்கலமொழி முதல்வகுத்துரைக்க என்பது மரபு. மங்கலமொழி முதல்வகுத்தெடுத்துக்கொண்ட நூல் இடுக்கணின்றி இனிது முடியும் என்ப. இந்நூல் கங்கை என்னும் மங்கலமொழியொடுதொடங்குகின்றது.

'கங்கை......பிறவும் காண்டகைய முன்மொழிக்கு
மங்கலமாஞ் சொல்லின் வகை'

என்பது வெண்பாப்பாட்டியல். இம் மங்கலமொழி ஆசிரியரால் நன்கு ஆராய்ந்து தகுதிநோக்கிக்கொள்ளப்பட்டதென்று தோன்றுகிறது. உழவுக்கு நீர் இன்றியமையாமையும் வேளாளர்க்குக் கங்கைமைந்தர் என்ற

பெயருண்மையும் காவிரி கங்கையோடு ஒத்த பெருமையுடையதாதலும் நோக்கின் கங்கையென்னும் முதன்மொழியின் தகுதியுடைமை நன்குவிளங்கும்.

வணக்கம்

கம்பர் திருமாலடியார் எனப் பலரும் கருதுவர். அதற்கு அவர் இராமாயணத்தில் ஆழ்வாரையும் திருமாலையும் வணங்கியிருப்பதைச் சான்முகக் கூறுவர். கம்பநாடர் சிவபிரானையும் திருமாலையும் வழிபடுபவர் என்பதும், ஏற்புடைக்கடவுள்வணக்கஞ்செய்து மேல் நூலிற்புகுவது அவரதியல்பு என்பதும் அவருடையநூல்களால் வெளியாகும். கலைமகளைவணங்குவது அவருடைய சிறந்த கோட்பாடு. இந்நூலில் விநாயகனையும் திரிமூர்த்திகளையும் நாமகளையும் கம்பர் வணங்குகின்றார். பிரமனை வணங்குவது பெருவழக்கன்று. கம்பர், 'மறைக்குரிய பூமனையும்...............பணிவாம்' என நான்முகனையும் வணங்குகின்றனர். கலைமகளுக்கு உறைவிடமும் இம்மை மறுமைகட்கு உறுதிபயக்கும் மறைவெளிப்படுதற்குக்காரணமும் ஆகிவிளங்கும் நான்முகத்தெய்வத்தை வழிபடுவது சாலப்பொருத்தமுடைத்தேயாகும்.

தெய்வம்

இந்நூலகத்து, விநாயகன், சிவன், திருமால், நான்முகன், இந்திரன், திருமகள், மன்மதன் என்னும் கடவுளர் சுட்டப்பெற்றிருக்கின்றனர். அவருள்,

'துங்கமனுநீதி துலங்கிட வையம்படைத்த
பங்கயன்றன் றுவிலுறை பாமடந்தை'

எனக் கலைமகளைக் கூறும்பகுதி நயஞ்சான்றுளது.

சோழமண்டலம்

தாம் பிறந்ததும், தம்மை ஆதரித்த சோழனுக்குரியதுமாகிய சோழமண்டலத்தைக் கம்பர்,

'சோழமண்டலமிதற்கிணையாமெனச்
சொல்லுமண்டலம்.........இல்லையே'

என்று சிறப்பிக்கின்றார்.

'அந்தணர் குலமுமெல்லா வறங்களும் தழைக்கவந்த
இந்திர ஞாலக்கம்போ லிருந்தது பெரிய நாடே.'

என்பதும் சோழநாட்டுச்சிறப்பை விளக்குவது.

சோழன்

கம்பர் செய்ந்நன்றிமறவாச்செவ்வியராதலின் தம்மை ஆதரித்த சோழ மன்னனை,

> ''முடியுடைய மன்னவருள் மூவுலகும் படைத்துடைய
> கொடியுடைய மன்னவரிற் குலவுமுதற் பெயருடையான்''

என்று பாராட்டிக்கூறுகிறார். இவ்வடிகளை ஆதாரவாகக்கொண்டு, கம்பர் முதற்குலோத்துங்கசோழன்காலத்தவர் எனக் கூறுதற்கும் இடமுண்டு. தாம்செய்வது சின்னூலாயினும், பன்னூற்கருத்தும் பயன்படவகுக்கும் ஆற்றலுடையராகலின், கம்பர் நாடு, நகர், அரசன், நீதி முதலியவற்றைக் கிளந்துரைத்துச்செல்வது வியப்பன்று.

வேளாளர்

எல்லாவகுப்பாருள்ளும்வைத்து வேளாளர் பலவகையாலும் உயர்தக்கார் என்பது கம்பர்கொள்கையெனத் தெரிகின்றது. அதற்குக்காரணம் வேளாளரது ஈகையும் உழவுதொழிலுமே. வேளாளரது ஈகைச்சிறப்பைக்காட்டத் திருக்கைவழக்கம் என்னும் நூலும் கம்பராற்செய்யப்பெற்றுளது. அந்நூலில்,

> ''உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
> கொடுக்க இசைந்த குளிர்க்கை'' எனவும்,

> ''மானம் குலம் கல்வி வண்மை யறிவுடைமை
> தானம் தருமம் தழைக்குங் கை'' எனவும்,

> ''வெள்ளைக் களைகளைந்து வீறும் பயிர்தழைக்கக்
> கள்ளக் களைகளைந்த கற்பகக்கை'' எனவும்,

வருவன பயின்று இன்புறற்பாலன.

ஏரெழுபதிகன்கண் வேளாளர் சிறப்பைக்கூறுமிடங்கள் பல.

> ''ஆழித் தேவர் கடலானுர் அல்லாத் தேவர் அம்பலத்தார்
> ஊழித் தேவர் தாங்கூடி யுலகங் காக்க வல்லாரோ
> வாழித் தேவர் பெருமக்கள் வையம் புரக்கும் பெருக்காளர்
> மேழித் தேவர் பெருமைக்கு வேறுந் தேவர் கூறேனே''

என்னும் பாட்டில் வேளாளரைத் தேவரினுஞ் சிறந்தார் எனவும், உலகோம்புங்கடவுளர் எனவும் கூறுகின்றார். அன்றியும்,

> ''தொழுங்குலத்திற் பிறந்தாலென்? சுடர்முடிமன்னவராகி
> எழுங்குலத்திற் பிறந்தாலென்? இவர்க்குப்பின் வணிகரெனும்
> செழுங்குலத்திற் பிறந்தாலென்? சிறப்புடைய ரானுலென்?
> உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே''

என்பதனுள் நால்வகைவருணத்தாருள்ளும் வேளாளரே உலகோம்புஞ் சிறப்புடையரென ஓதுகின்றனர். இதுபற்றியே வேளாளர்குலத்தைக் கோதில்தலம் என்பர். (கோது இல் குலம் - குற்றமற்ற குலம்.)

மேலும், வேளாளரைத் தாயனையர் என்வும், வரம்பிலன்பினர் எனவும் பலவிடத்துங் கூறுகின்றனர்.

'அழுங்குழவிக் கன்புடைய தாயேபோ லனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்காளர்'

'சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்'

என்பன காணத்தக்கன.

'பொய்வரம்பு தவிர்த்தருளும் புவிமடந்தை திருமைந்தர்'
'ஊழிபெயரினும் பெயரா வுரையுடைய பெருக்காளர்'

என்பன வேளாளரது வாய்மையையும்,

'எடுத்தபுகழ்ப் பெருக்காளர்'
'ஊட்டுவார் பிறருளரோ வுலகுதனி லுழும்பகடு
பூட்டுவார் புகழன்றிப் பிறர்புகழும் புகழாமோ'
'விற்பொலியும் பெருங்கீர்த்தி வேளாளர்'
'வளர்ந்தபுகழ்ப் பெருக்காளர்'

என்பன வேளாளரது புகழையும் செவ்வனம் தெரிக்கின்றன. இன்னும்,

'வெங்கோபக் கலிகடிந்த வேளாளர்'
'வெய்யகலி வலிதொலைக்கும் வேளாளார்'

என்பன கலியையும் வலிதொலைக்கவல்லார் என வேளாளர்பெருமையினையும்,

'ஏர்வேந்தர் போர்க்களத்தில் இரப்பவரும் தோலாரே'
"நாவலோ நாவலென நாடறிய முறையிட்ட
ஏவலோர் போர்க்களத்தில் எதிர்நிற்பர் முத்தமிழ்தேர்
பாவலோர் இசைவல்லோர் பற்றுடைய பதினெண்மர்
காவலோ ரெல்லாரும் கையேற்கும் பொருட்டாலே"

என்பன வேளாளர் பொலிக்களத்தின்சிறப்பினையும்,

'செந்தமிழ்க்கு முதலாய திருவாளர்'

என்பது வேளாளர் செந்தமிழ்பேணும் திறத்தினையும் நன்குவிளக்கும்.

காவிரி

காவிரியாறு சோழநாட்டினை ஊட்டிப்புரக்கும் உயர்வுடையது. சிலப்பதிகார முதலிய நூல்களிலே காவிரியின் சிறப்புக் கூறப்பெற்றுளது; கம்பர் நூல்களிலும் அது கவின்பெறச் சுட்டுரைக்கப்பெற்றுள்ளது.

'காராணிக்காவேரி'

'ஊற்றேறுங்குலப்பொன்னி'

"வளைகளையும் மணிகளையும் மலர்களையும் வரும்பலவின்
சுளைகளையும் கொடுகரைக்கே சொரிபொன்னி"

என்பன காவிரியின் நீர்ப்பெருக்கினையும் நீரால் ஒதுக்கப்பெறும் வளங்களை யும் காட்டுவன.

உழவு

உலகத்தையெல்லாம் ஊட்டி, ஓம்பும் உழவைச் சிறப்பியாத புலவர் இலர். கம்பர் உழவின் இன்றியமையாமையை நன்கறிந்தவர். இந்நூல் முழுவதும் உழவின்சிறப்பைக் கூறுவதாயினும், சில அடிகள் மிக்கநயமுடையன; சிறப்பினவாகக் கருதற்பாலன. அவற்றுள்,

'உழுங்கருவிற் கருவீறி யுலகமுதற் கருவாக'

என்பது, உலகம் தழைத்துவருவது நெற்பயிர் கருவேறுதலால் என்னும் கருத்தினை விளக்குகின்றது.

'கரையேற்றும் நுகமன்றோ காராளர் உழுநுகமே'

'உழுநுகத்தின் சீராணிக் கொப்பதொரு சிறந்தாணி செப்பீரே'

என்பன நுகத்தின் சிறப்பையும் ஆணியின் சிறப்பினையும் காட்டுவன.

'..................................எழுநுகத்தோ டிணைப்பகடு
தொடுத்ததொடைநெகிழாதே வுலகுதொடைநெகிழாதே'
'ஏர்பூட்டினல்லதுமற் றிரவியுந்தேர் பூட்டானே'
'உலகெலாமொலிவிளங்கும் உழவருழும் உழவாலே'
'உழுதசால் வழியன்றி உலகுவழி யறியாதே'
'செய்வரம்பு திருத்தாரேல் திசைவரம்பு திருந்தாதே'
'வித்துவிளைத் திடிலன்றி வேண்டுவன விளையாவே'
'நாறுவளர்த் திடிலன்றி ஞாலமுயிர் வளராதே'
'கைப்பாங்கு பகுந்துகடக் கற்றாரே கற்றாரே'
'உழுதுசால் பலபோக்கி உழவருழக்கிய வெங்காற்
புழுதியால் விளையாத பொருளுளவோ புகலீரே'
'பைங்கூழை-நட்டாரே வையமெலாம் நலந்திகழ நட்டாரே'
'பைங்கூழின்-நீர்தாங்குவாரலரோ நிலந்தாங்குகின்றாரே'
'களைகளையாவிடில் வேந்தர் கலிகளையமாட்டாரே'
'செஞ்சாலி - கருவடையிற் பூதலத்திற் கலியடையமாட்டாதே'
'செஞ்சாலிக் - குலைவளையும் பொழுதினிற்செங் கோல்வளையமாட்டாதே'

'பீடுவாம் பிடைவயலிற் பிறைவாளிற் கடிகின்ற
சூடுவாம் பெறுதேற் சுருதிவாம் பெறுதே'

'விரைக்கோட்டைகொண்டன்றே வேந்தரிடுங்கோட்டைகளே'

என்பன உழவின்சிறப்பினையும் அதன் இன்றியமையாமையினையும் நயம்பட வற்புறுத்துகின்றன. உலகம் நிகழ்ந்துவருதற்கும், அரசியல்நடத்தற்கும் தேவர்தம்கடனைச்செய்தற்கும் உழவே அடிப்படையாகும் என்னும் கருத்தினைக் கம்பர் நயம்பட அமைத்துக் கூறியிருக்குந்திறன் பாராட்டற்பாலதே.

இவ்வாறு வேளாளர்க்கின்றியமையாத தொழிலாகிய உழவைச் சிறப்பித்துக்கூறிய ஆசிரியர்,

'அந்தணர்க்கு வேதம் முதல்', அரசர்க்கு வெற்றி முதல்
முந்தியசீர்வணிகர்க்கு முதலாயமுதல்'

என ஏனையோர்க்கு இன்றியமையாதவற்றை விளக்கியும், மக்கள் ஒழுகலாற்றை வரையறுக்கும் மறையின்சிறப்பை,

'மெய்வரம்பாநிற்கின்ற வேதநூல்'
'மெய்ப்பாங்குபடக்கிடந்த வேதநூல்'

எனப் பாராட்டியும் செல்வர்.

நயம்மிக்கபாடல்கள்

இந்நூலுள் நயஞ்சான்ற சிலபாடல்கள் வருமாறு:—

"கார்நடக்கும் படிநடக்குங் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சால் இயலிசை நாடகம் நடக்கும்
சீர்நடக்கும் திறம்நடக்கும் திருவறத்தின் செயல்நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே"

என்பதனால் மொழிப்பயிற்சியும், இசைமுதலிய கலைப்பயிற்சியும், அறமும், அரசியலும், அவற்றாலாம் இன்பமும் செல்வமும் நிகழ்தற்கு ஏது உழவு தொழிலே என்று கூறுதல் காண்க.

"திறைமயங்கா தருள்விளங்குஞ் செயல்மயங்கார் திறல்வேந்தர்
நிறைமயங்கார் வணிகேசர் நிலைமயங்கார் அந்தணர்கள்
மறைமயங்கா தொருநாளும் மனுமயங்கா துலகத்தின்
முறை மயங்கா தவர்வயலின் முளைமயங்காத்திறத்தாலே"

என்பதனால், வயலின் முளை மயங்கின் (அழியின்) நெல்வளம் இன்றி வறுமை மிகும்; அதனால் உயிர்கள் வாழ்வும் அரசியலும் அந்தணர் வணிகர் தொழில்களும் நிலையா என்றவாறு. எனவே வேளாளர் பயிர்த்தொழிலே எனை வகுப்பாரையும் நிலைபெறச்செய்வது என்பது போதரும்.

"பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வம் அழிவுபடாதிருத்தலினல்
தேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர்வெல்வர் சிலர்தோற்பர்
ஏர்வேந்தர் போர்க்களத்துள் இரப்பவரும் தோலாரே"

இதனுள் 'இரப்பவர் தோலார்' என்றது இரப்பார்க்கெல்லாம் வேளாளர் வரையாதுகொடுப்பர் என்றவாறு. இரப்பார்க்கு இரவற்பொருள் கிடையாமை அவர்தம்முயற்சிக்கண் தோல்வியாம். அத்தோல்வியை உழவரது நெற்போர்க்களத்து அவர் எய்தார் என்றபடி.

இன்னும் இவைபோல் அறிந்தறிந்து இன்புறத்தக்கபாடல்கள் இந்நூலிற் பலபல உள.

வழக்கு

முற்கால உழவர்வழக்குக்களும் பிறவழக்குக்களும் இந்நூலுள் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் உழவுநாட்கோடல், நிலமகளை உழவர்வணங்கல், நாற்றுநடுதல், அரிகதிர் பிறர்க்கு வழங்கல், நெற்போர்க்களத்தைச் சிறப்பித்துப் புலவர் பாடல், நெற்போர்செய்வார் நாவலோ என அழைத்தல், நெல்லைச் சேமித்தல், புலவர்முதலியோர்க்கு நெல்வழங்கல் முதலியனவை சிறந்தவை. இவற்றுள்ளே பல இப்பொழுதும் உழவரிடையுள்ளன.

மேற்கோள்

கம்பர் தம் செய்யுட்களிலே பிற சிறந்த நூற்கருத்துக்களையும் தொடர்களையும் பயன்படுத்துரைக்கும் இயல்புடையவர் என்பதும், திருக்குறள், சீவகசிந்தாமணி, திவ்யப்பிரபந்தம் சூளாமணி முதலியவற்றின் அடிகளும் கருத்துக்களும் இவரால் பெரிதும் விரும்பப்படுவன என்பதும் இராமாயண முதலியவற்றாலும் இந்நூலாலும் அறியலாகும்.

முடிவுரை

இந்நூல் காவிரிநாட்டு வேளாளர்மேற் பாடப்பட்டது என்ப. இவர், 'பொன்னித்திருநாடர்' என வேளாளரைக்குறிப்பது இக்கொள்கையை வலியுறுத்தும். எழுபதுபாடலால் இயற்றப்பட்ட இந்நூலுள் இரண்டு பாடல்கள் பலபதிப்புக்களிலும் காணப்படவில்லை. சிலபதிப்புக்களில் இறுதியிற் சேர்க்கப்பட்ட பாடல்கள் இந்நூலின் நடையைத்தழுவியனவாகக் காணப்படவில்லை. கம்பர்புலமைத்திறம் முழுவதும் இச்சிறுநூலால் அறிதல் இயலாதென்பது ஒருதலை. ஆயினும், இதனுள், கம்பர்புலமைமணம் ஆண்டாண்டுக் கமழ்கின்றது.

உ

பழையகோட்டைப்பட்டக்காரர்

ராவ்பஹதூர் நல்லதம்பிச்சர்க்கரைமன்றாடியார் M. L. A.

நினைவுக்குறிப்பு

ஸ்ரீ. ராவ்சாஹிப். V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.,
(Retired Veterinary Dy. Superintendent.)

குடும்பப்பெருமையும் தேசசேவையும்

"கோவைக்கோமான், திராவிடத்திலகம், பழையகோட்டைப்பட்டக்காரர், நல்லதம்பிச்சர்க்கரைமன்றாடியார்.........27—8—45 இரவு 9-30 மணிக்கு.........மாரடைப்புநோயால் மன்பதையைவிட்டு மறைந்தார்....... செல்விருந்தோம்பி வருவிருந்தை எதிர்நோக்கிநிற்கும் பண்டைத்தமிழரின் பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர்.......சமுதாயத்துறையிலும், அரசியல்துறையிலும் போதியபங்கெடுத்துப் பணிபல புரிந்தவர். சென்னை அரசியல்உறுப்பினராகவும் (M.L.A.) ஜில்லாபோர்டு தலைவராகவும், நில அடமானபாங்கின் தலைவராகவும் இன்னும் பல ஸ்தாபனங்களுக்கு நிர்வாகியாகவும் பல ஆண்டுகளிருந்து பொதுநலப்பணியில் ஈடுபட்டுப் புகழ்பெற்றவர்." [திராவிடநாடு (2—9—45) 6-ஆம் பக்கம்]

"குல*விச்சை கல்லாமற் பாகம்படும்"

இவர், கோர்ட்டவார்ட்சாரால் நியமிக்கப்பெற்ற உபாத்தியாயரிடம் பாலப்பருவப்படிப்புப் பயின்றுகொண்டிருந்தகாலமுதல் இவரை நான் அறிந்துள்ளேன்.† தாம் கற்றுக்கொடுக்கும் சிரமத்துக்குத்தக்கவாறு இவர் கல்வி

---

* விச்சை - வித்தை.

† திருநெல்வேலித் திரவியம் தாயுமானவர் ஹிந்துகலாசாலையிலும் சென்னைக் கிறிஸ்தியன்கல்லூரியிலும் பலவருடம் என்னுடன் ஒருசாலை மாணாக்கராகப்படித்த ஸர். T. N. சிவஞானம்பிள்ளை KT. மந்திரியாயிருந்த காலத்தில் அவரைப் பார்க்க நான் சென்னைக்குச் சென்றிருந்தபோது, அவரிடம் வந்திருந்த இவரைப் பார்க்கும்படி வாய்த்ததுதான், இவரை நான் கடைசியாகச் சந்தித்தகாலம்.

விருத்தியடையவில்லையென்று அந்த உபாத்தியாயர் என்னிடம் சொன்னது நினைவுக்குவருகின்றது. ஆயினும், நான் மிருகவைத்திய இலாகாவில் உத்தியோகத்தனுகப் பழையகோட்டைக்குப் பலமுறைபோய் இவருடைய மாடுகள் குதிரைகளைப் பார்வையிட்டு அவைகளை இவர் பராமரிக்கும் முறைகளைக் கவனித்தபோது, மிருகவைத்தியகலாசாலைப்படிப்பில்லாமலே, அக் கலாசாலையிற் படித்துத் தேர்ந்து பட்டம்பெற்றவர்களெல்லாரினும் திறமையாக இவர் தந்தொழிலை நடத்திவந்ததைத் தெரியலானேன். தெரிந்து, "குலவிச்சை கல்லாமற்பாகம்படும்" என்பதற்கு இவர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியதையறிந்து மகிழ்ந்தேன். கால்நடை அபிவிருத்திசெய்தலில் அனுபவமுதிர்ச்சியும் அக்கரையுமுடைய ராசப்பிரதிநிதி லார்டு லின்லித்கோவும் இந்தியாவில் உள்ள மிருகவயித்திய இலாகாத் தலைமையதிகாரிகளும் இவர் தொழிற்றிறமைச்சிறப்பை நன்குமதித்து மனமாரப் புகழ்ந்திருப்பது பத்திரிகைகளில் வெளியாயிருப்பதைப் பலர் பார்த்திருப்பார்கள்.

பண்ணையார்களுக்குச் சிறந்த முன்மாதிரி.

மத்தியானகாலத்தில் நான் பழையகோட்டைக்குப்போகும்படி நேர்ந்த பலசமயங்களில் இவரைக் காணமுயன்றபோது, இவர் பண்ணைநிலங்களில் வேலைநடப்பதை மேற்பார்ப்பதற்குப் போயிருக்கிறுரென்றும் மத்தியான போசனம் வேலைத்தலத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும் வேலை முடிந்தபின்னரே திரும்பிவருவாரென்றும் தெரிவிக்கப்பெற்றிருக்கிறேன். எத்தனையோ பல பண்ணைமேற்பார்வையாளர் தம்கீழிருந்தாலும், பண்ணை வேலைகளைத் தாமும் மேற்பார்வையிடுவது தம் கடமையெனக்கொண்டு இவர் அதனைச் செவ்வையாகச் சிரத்தையுடன் செய்துவந்தது பெருநிலக்கிழவர்களான பண்ணையார்களுக்குச் சிறந்த முன்மாதிரியாகும்.

கால்நடைப் பராமரிப்பு நுணுக்கம்.

கோயமுத்தூர்ஜில்லாத் திருப்பூரில் ஒரு வருஷாந்தர மாட்டுச் சந்தைக்கு வந்திருந்த மாட்டுக்கூட்டங்களை இவரும், நானும் பார்த்துக் கொண்டுசென்றபோது, உயர்தரமாடுகளடங்கிய கூட்டங்களைக் கண்டபோது, "இந்தக்கூட்டம் தங்களுடையதோ ? இந்தக்கூட்டம் தங்களுடையதோ?" என்று நான் கேட்டபோதெல்லாம் "இல்லை" "இல்லை" என்று

சொல்லிவந்தவர், தம் மாட்டுக் கூட்டத்தண்டை வந்தபோது, "இது என் மாட்டுக்கூட்டம்" என்று கூறி, "இந்தக்கூட்டத்துக்கும் மற்றக்கூட்டத்துக்கும் என்ன வித்தியாசங்கண்டீர்கள்" என்று கேட்டார். நான் "இந்தக் கூட்டம் மற்லெல்லாக் கூட்டங்களினும் மிக உயர்த்ததரமான மாடுகளடங்கியிருக்கிறதுதான் நான் கண்ட வித்தியாசம்" என்று என் மனத்துட்பட்ட உண்மையைக் கூறினேன். "உயர்தரமிருக்கட்டும். வேறு குறிப்பிட்ட வித்தியாசம் ஏதாயினும் கண்டீர்களா?" என்றார். "இல்லை, நீங்கள் சொல்லுங்கள்" என்றேன். "மற்றெந்தக்கூட்டத்திலும் விலாப்பக்க முதலிய இடங்களில் சாணக்கறைபட்டிராத மாட்டைக் காண்பது அரிது. இந்தக் கூட்டத்தில் ஒரு மாடாவது எங்காவது அந்தக் கறை பட்டிருப்பதைக் காண முடியாது" என்றார். "அது எதனால்?" என்றேன். வரிசைவரிசையாகக் கட்டப்பட்டிருந்த தம் மாட்டுக்கூட்டத்தைச்சுற்றி உலாவிக்கொண்டிருந்த ஒரு வேலைக்காரனைச்சுட்டிக்காட்டி, "மனிதன் உண்டுகளிப்பான், மாடு கண்டு களிக்கும்" என்ற பழமொழிப்படி மொத்தமாகத் தீவனத்தை முன் போட்டால் மாடுகள் வயிறாரத்தின்னாமல் குறையாகத் தின்பதையும் மிஞ்சிய தீவனத்தைக் காலால் மிதித்தழிப்பதையும் தடுப்பதற்காகத் தின்னத்தின்னச் சிறிதுசிறிதாகத் தீவனம் போட்டுவரவும், கட்டுக்கயிற்றில் மாட்டுக்கால்கள் சிக்கிக்கொள்வதை விடுவிக்கவும், எந்த மாடு சாணம்போட்டாலும் உடனே அதனிடம் சென்று அதற்கு எட்டாததூரத்தில் சாணத்தைக் காலால் தள்ளிவிடவும் இந்த வேலைக்காரன் நியமிக்கப்பட்டிருக்கிறான்" என்றார். இதனால் இவருடைய கால்நடைப்பராமரிப்பு நுணுக்கத்தை அறிந்து வியப்புற்றேன்.

"செயற்கரிய செய்வார் பெரியர்"

மேலே, இவர் மிருகவயித்திய கலாசாலையிற் பயலவில்லையென்றாலும், அப்பயிற்சிபெற்றவரெவரினும் சிறப்பாகக் கால்நடைகளைப் பாராமரித்தவரென்று கூறியிருக்கிறேன். அந்த உண்மையை ஆச்சரியகரமாகவும் மறுக்க முடியாதவாறாகவும் மெய்ப்பித்து விளக்கிக்காட்டும் நிகழ்ச்சிகளடங்கியது பின்வரும் வரலாறு.

நான் மிருகவயித்திய இலாகா டிப்டி சூப்பிரின்டென்றாக இருந்த காலத்தில் (1911–15) சிவகிரிஜமீன் தலைமைத்தானமான சிவகிரியிலிருந்த

மிருகவயித்தியசாலையை மேற்பார்க்கப் போயிருந்தபோது, ஜமீன்தார் ஆஸ்திரேலியகண்டத்துப் பசு ஒன்று வாங்கியிருப்பதைக்கேள்வியுற்று அது கட்டப்பட்டிருந்த இடத்துக்குப்போய், அது இந்தத் தேசத்து உட்டணம் தாங்கமாட்டாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இரங்கத்தக்க நிலையி லிருந்ததைக் கண்டேன். ஜமீன்தார் அதைக் கோடைக்காலத்தில் மிகுந்த பணச்செலவுசெய்து நீலகிரியில் சௌகரியமாகத் தங்கச்செய்திருந்தா ரென்று தெரியலானேன். இதன்பின் பழையகோட்டைக்குப் போன போது, இவரோடு, இவர் மாடுகளில் ஒருபகுதி மேய்ந்துகொண்டிருந்த மேய்ச்சற்காட்டைப்பார்க்கச்சென்றேன். அங்கே உக்கிரமான வெயில் வேளையில் எட்டு ஆஸ்திரேலியமாடுகள் மற்ற மாடுகள்போலவே சௌகரிய மாக மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்துப் பிரமித்து, இவரைநோக்கிச் சிவகிரியிலுள்ள ஆஸ்திரேலியமாட்டின் பரிதாபநிலைமையை விவரித்துக்கூறி, "இவைகளை இந்த வெயிலில் கஷ்டமின்றி மேயும்படி என்ன செய்தீர்கள்" என்று கேட்டேன். "இந்த மாடுகள் இங்கே வந்தபோது காலைவெயிலைக் கூடத் தாங்கமாட்டாமல் கேத்துப்பூத்தென்று பெருமூச்சுவிடுவதைப் பார்த்தேன். உடனே அகலமும் நீளமும் உயரமும் மிக அதிகமாகவுள்ள ஒரு பெரிய கொட்டகைநடுவிற் கொண்டுபோய்க் கட்டும்படிசெய்தேன்; பின்பு, இராத்திரிமுழுதும் வானவெளியிற் கட்டவும் பகலில் காலையிற் சிறிதுநேரமும் மாலையிற் சிறிதுநேரமுமாக வரவர வெயிலில் நிற்கும் நேரத்தை அதிகப்படுத்திக் கடைசியாகப் பகற்காலமுழுதும் வெயிலில்நிற்கப் பழகிவிட்டபிறகு மற்ற மாடுகளோடுசேர்ந்து மேயும்படி செய்துவிட்டேன்." என்றார். மேற்குறித்த ஜமீன்தார் (சென்னை மிருகவயித்தியகலாசாலையில் மூன்றுவருடம் படித்துத் தேர்ந்தவராயிருந்தவர்) செய்யமாட்டாத அருஞ் செயலைப் பூரணதிருப்திகரமாக முற்றுப்பெறச்செய்து சித்தியடைந்த இவர் போன்றாரை மனத்துட்கொண்டே, திருவள்ளுவர், "செயற்கரிய செய்வார் பெரியர்" எனச் செப்பியிருக்கவேண்டுமென்று சிந்தித்து மகிழ்ச்சியடைந் தேன்.

இவர்பிரிவாற்றாமையால் வருந்தும் இவருடைய குடும்பத்தார் உறவினர் நண்பர் முதலியோர்களுக்கு என் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஆறுதல் அடைவார்களாக.

ஸ்ரீ:

மதிப்புரை

—:o:—

இராகவன் புகழறுபது:-இது, இராமாவதாரம்முதல் இராவணனை வென்று இராமன் முடிசூட்டிக்கொண்டதுவரையுள்ள முக்கிய நிகழ்ச்சிகளையெல்லாம் அறுபதுசெய்யுளில் நன்கமைத்து, ஆங்காங்கு ஆழ்வார்களும் கம்பரும் ஆதிய முன்னையோர்கருத்துக்கள் பயின்று சுவையும் தெளிவும் உடையதாக இயற்றப்பெற்றது. இதனை யியற்றியவர், திரு. கா. அ. ஷண்முகமுதலியாரவர்களாவர். முதலியாரவர்கள், தம் அறுபதாம்ஆண்டுநிறைவின் நினைவுக்குறிப்பாக இந்நூலை வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கது. இதனால் முதலியாரவர்களது செய்யுளியற்றுமாற்றலும் பகவத்பாகவத விஷயமான பத்திப்பெருக்கும் தமிழார்வமும் நன்கு புலனாகும். தம் பிறந்தநாளைக்கொண்டாடவிழைவார்க்கு முதலியாரவர்களுடைய இச்செயல், ஒரு சிறந்த முன்மாதிரியாகும். இதன் விலை அணா ஆறு. வேண்டுவோர், K. A. S. அண்டு ஸன்ஸ், அண்டு பிரதர் ஸன்ஸ், திருப்பத்தூர்: என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

———

தமிழ்விளக்கு:—இது, மூன்று மாதத்துக்கொருமுறை வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் ஆசிரியர்: திரு. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்களாவர். இதன் முதற்சுடரில் ஆசிரியர் வரைந்த இலக்கியக்கட்டுரைகளும் அவர் இயற்றிய பல தனிக்கவிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. கட்டுரைகள் படிப்போர்க்குப் பொருளைத் தெளியவிளக்குவன; இனியநடையின; மாணவர்க்குக் கட்டுரைவரையும் ஆற்றலை உண்டாக்கத்தக்கன; இடையிடையே சந்தர்ப்பத்துக்கேற்ப ஆசிரியர் இயற்றிச்சேர்த்த செய்யுட்களையுடையன. கவிகள் பல பொருள்பற்றி இயற்றப்பெற்றவை; பெரும்பாலும் திருந்திய இனிய நடையுடையவை. இதன் விலை ரூபா ஒன்று. இம் முதற்சுடரில் வந்த இலக்கியக்கட்டுரைகளை ஆசிரியர் ஒரு தனிப்புத்தகமாகவும் வெளியிட்டுள்ளனர். அதன் விலை அணா ஆறு. வேண்டுவோர் பண்டித. இராம சுப்பிரமணியநாவலர், செந்தமிழ்நிலயம், பதுமநாபபுரம், தக்கலை P. O., திருவநந்தபுரம்: என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

———

1945-ஆம் நவம்பர்மீ 9உ (பார்த்திபஆம் ஐப்பசிமீ 24உ) இராமநாதபுரத்தில் மஹாராஜா அவர்களிரண்மனையிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாத சேதுபதிமஹாராஜா அவர்கள்
—அக்கிராசனாதிபதி.
2. மகா-ா-ா-ஸ்ரீ. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B A., B.L. M.L.C.
உப-அக்கிராசனாதிபதி.
3. ,, P. ராமஸ்வாமிராஜு அவர்கள் B.A., B.L.
4. ,, A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. சங்கத்தின் 1945-ம்ஆம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களின் வரவு செலவு கணக்குகளும், 1944—45ம் வருஷத்திய வருஷாந்தக்கணக்குகளும் அங்கீகரிக்கலாயின.

2. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய (1) சேலம்ஜில்லா, ஹஸூர். ஸ்ரீ. H. S. வேணுகோபாலையங்காரவர்களையும், (2) சேலம்ஜில்லா, ஹஸூர்த்தாலூகா, தீர்த்தமலைப்போஸ்டு, கூடலூர் ஸாந்திவிலாஸ் ஸ்ரீ. S. ராஜகோபாலையரவர்களையும் அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

3. சென்னை. ஸ்ரீ. S. கலியாணசுந்தரமையரவர்களின் 5-10-45ம்உ கடிதப்படி, திருத்தணிகைத்திருவிருத்தத்தை உரையுடன் அச்சிட்டுக் கொள்ள அநுமதிதரலாயிற்று.

4. 1945-ம்ஆம் நடைபெற்ற சங்கப்பரீக்ஷைகளின் தேர்ச்சிக்குறிப்புக்கள் (Results) ரிக்கார்டுசெய்யலாயிற்று.

5. மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களுக்கு ஸ்ரீமாந். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் எழுதிய 9—11—45ம்உ கடிதவிஷயம் பின்னால் ஆலோசித்துக்கொள்ளலாமென்று வைக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*
9—11—'45. அக்கிராசனாதிபதி.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பத்திரண்டாந்தொகுதி.

Volume 42.

தாருண—பார்த்திப ௵

1944—1945

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

—

உ

செந்தமிழ்.

42-ஆம் தொகுதியின் உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அணிநலன்:—	ஸ்ரீ. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள்	கஉரு
அநுதாபக்குறிப்பு:—	பத்திராசிரியர்	க0௪
இராமாயணோதயம்:—	ஸ்ரீ. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.	அ0
இளம்பூரண அடிகளும் மணக்குடவரும்:-	ஸ்ரீ. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்.	கருஉ
இன்பம்:—	ஸ்ரீ. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்	எஎ
ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர்மன்ற ஆண்டுவிழாக்கொண்டாட்டம் :-	ஸ்ரீ வ. சு. இராஜஐயனாரவர்கள்	ருக
உதவிப்பத்திராசிரியர்குறிப்பு:—	T. K. இராமாநுஜையங்கார்	கருஎ
எயில்கோடல்:—	ஸ்ரீ. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்	சுக
ஏரெழுபது:—	ஸ்ரீ. பண்டித. இராமசுப்பிரமணிய நாவலரவர்கள்	கஎஅ
ஒருதுறைக்கோவை யாராய்ச்சி:—	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்	அக, கக்க, ககரு, கசக
ஒரு வரவேற்புப்பத்திரம் :—	ஷெ	கக
கல்வெட்டுக்களில் நாட்டோடு இணைத்து வழங்கப்பெறும் எண்கள்:-	ஸ்ரீ T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்	ககசு

குமரகுருபரர்:—ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் கசுகூ

தமிழ்நாட்டுமணம்:—ஸ்ரீ. சி. கணேசையரவர்கள் ... கூள

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— ... ... கஉச

திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம்:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. ருக, கநஎ, கசுரு

ராவ்பஹதூர் நல்லதம்பிச்சர்க்கரைமன்றாடியார் M. L. A. நினைவுக்குறிப்பு:— ௸ கஅரு

நேசநாட்டார்வெற்றி:— T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். கசுங

பண்டைத்தமிழர்:— சுவாமி ஞாநப்பிரகாசரவர்கள், நல்லூர் ரு, உக, நச, ருஎ, கூக, கசங

பாரிஜாதவீணை:— ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள் க

மதிப்புரை:— ... கஉ, உங, நஉ, ருசு, எசு, க0அ, ககூ0

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள் :–உ0, கூச, கஎசு, கஅகூ

மேற்கானுடும் கீழ்க்கானுடும்:— ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் க0ரு

வாழ்க்கையும் விஞ்ஞானமும்:— ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. கங, உரு, சக, எக

அநுபந்தம்.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— பகுதி கஉ-ல் பக். 1—8

செந்தமிழ் 42-ஆம் தொகுதிக்குப் பொருளுரைவழங்கியோர்பெயரும் பொருளுரைகளின்பெயரும் பக்கமும்

ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. மயிலாப்பூர்.

வாழ்க்கையும் விஞ்ஞானமும் கரு, உரு, சக, எக.

ஸ்ரீ. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள், செந்தமிழ்ப்பதிகம், பதுமநாபபுரம், தக்கலை P. O. திருவநந்தபுரம்.

அணிநலன் ... ... கஉரு

ஏரெழுபது ... ... கஎஅ

T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.

உதவிப்பத்திராசிரியர்குறிப்பு ... கருஎ

ஒருதுறைக்கோவையாராய்ச்சி அக, கககு, ககரு, கசசு

ஒரு வரவேற்புப்பத்திரம்.. ... கக

நேசநாட்டார்வெற்றி ... ... ககரு

ஸ்ரீ. வ. சு. இராஜஐயனாரவர்கள், யாழ்ப்பாணம், இலங்கை.

ஈழநாட்டுத்தமிழ்ப்புலவர்மன்ற ஆண்டுவிழாக் கொண்டாட்டம் ... ... ருசு

ஸ்ரீ. சி. கணேசையரவர்கள், புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.

தமிழ்நாட்டுமணம் ... ... சுஎ

ஸ்ரீ. மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள், பேராசிரியர், அண்ணாமலைபல்கலைக்கழகம்.

இன்பம் ... ... எஎ

எயில்கோடல் ... ... சுக

ஸ்ரீ. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L., மதுரை.

இராமாயணோதயம் அ0

ஸ்ரீ. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், ஆசிரியர், அண்ணாமலை பல்கலைக்கழகம்.

இளம்பூரண அடிகளும் மணக்குடவரும் கடுஉ

கல்வெட்டுக்களில் நாட்டோடு இணைத்து
வழங்கப்பெறும் எண்கள் ... ககசூ

ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், ஆசிரியர், திருவையாறு.

குமரகுருபரர் ... ... கசாசூ

மேற்கணக்கும் கீழ்க்கணக்கும் ... க0டு

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C., வெள்ளகால்.

திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம் டுக,
கஙஎ, கசாடு

ராவ்பஹதூர் நல்லதம்பிச்சர்க்கரை
மன்றாடியார் M. L. A. நினைவுக்குறிப்பு கஅடு

ஸ்ரீ. சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர், யாழ்ப்பாணம்.

பண்டைத்தமிழர் டு, உக, ஙச, டுஎ, சூக, கசங

ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள், இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர்.

பாரிஜாதவீணை ... ... க

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1945-ஆம்௵ மார்ச்சுமீ 3௳ நடத்திய

ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

[எண்கள் ரிஜிஸ்டர்நம்பரைக் குறிப்பன.]

பி. ஏ. பரீக்ஷை.

2-வதுவகுப்பு.

அமெரிக்கன் காலேஜ், மதுரை:—1.
கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்:—24.
ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை:—38, 39, 42.

எப். ஏ. பரீக்ஷை.

1-வதுவகுப்பு.

281 C ஸ்ரீநிவாஸன், மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.
(முதற்பரிசு ரூபா 40.)
294 D சுசீலா, மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.
(இரண்டாவதுபரிசு ரூபா 35.)
290 M சங்கரலிங்கம், மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.
(மூன்றவதுபரிசு ரூபா 30.)
181 V பாலசுப்ரமணியன், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
(நான்காவதுபரிசு ரூபா 25.)
214 V வரதராஜன், முனிஸிபல்காலேஜ், சேலம்.
(ஐந்தாவதுபரிசு ரூபா 20.)
137 சே சீதாராமன், ஸெண்ட்ஜோசப் காலேஜ், திருச்சி.
168 மெய்யப்பன், ஷை ஷை
180 S பெரியசாமி, கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்.
183 R இராசகோபாலன், ஷை ஷை
200 J M பாஸ்கரன், ஷை ஷை
204 R நரசன், முனிஸிபல் காலேஜ், சேலம்.
278 S பழனியப்பன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
279 S ஆறுமுகம், ஷை ஷை
280 M ரெத்தினம், ஷை ஷை
285 D பாலகணபதி, ஷை ஷை
286 V ராமமூர்த்தி ஷை ஷை
292 M சௌபாக்கியம், ஷை ஷை

299 A உமாபதி, பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.
349 M S சீனிவாசன், கவர்ன்மெண்ட் மகமடன் காலேஜ், சென்னை.

2-வதுவதுப்பு.

மதுரைக்காலேஜ், மதுரை:—48, 51, 53 to 57, 59, 61, 63, 64, 65.

அமெரிக்கன் காலேஜ், மதுரை:—66.

ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி:— 69, 73, 78, 81, 84, 87, 89 to 94, 96, 102, 104, 107, 109, 110, 119, 120, 126, 127, 130, 131, 133, 134, 135, 138 to 142, 144, 145, 148, 154, 156, 158, 160, 165, 169.

கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்:—170 to 176, 178, 179, 182, 184, 185, 187 to 190, 193, 194, 196, 199, 202.

முனிஸிபல் காலேஜ், சேலம்:—203, 205, 207, 210, 213, 216.

கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜ், கோயம்புத்தூர்:—239, 244, 256, 261, 269, 270, 272.

மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை:—277, 282, 283, 284, 287, 289, 293.

பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை:—298, 300, 301, 302, 304.

பச்சையப்பா காலேஜ், சென்னை:—307, 308, 313, 315, 324, 325, 327, 328, 330, 332, 333, 335, 336, 338, 339, 347.

மேரிராணி கல்லூரி, சென்னை:—351, 352.

ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை:—358 to 363.

ஸெண்ட்ஜான் காலேஜ், ஷை 364, 366, 367.

மெற்றிக்குலேஷன்பரீக்ஷை.

1-வதுவதுப்பு.

674 A திருவேங்கடம், P K நாடார் ஹைஸ்கூல், திருமங்கலம்.
[முதற்பரிசு ரு. 30.]

678 N துரைசாமிபாஸ்கரன், P K நாடார் ஹைஸ்கூல், திருமங்கலம்.
(இரண்டாவதுபரிசு ரு. 25.)

1061 C கோபாலன், கோகுலநாத் ஹிந்து மஹாஜன ஹைஸ்கூல், சேலம்.
(மூன்றுவதுபரிசு ருபா 20.)

2299 G ஜானகி, ஹைஸ்கூல், பத்தமடை.
(நான்காவதுபரிசு ருபா 15.)

1356 S சீநிவாசன் கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
(ஐந்தாவதுபரிசு ருபா 12.)

550 A ஜான் ஆரோக்கியம், ஸெண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை.
668 A M சிவராமன், P K நாடார் ஹைஸ்கூல், திருமங்கலம்.
670 R சந்திரசேகரன், ஷை ஷை
1062 K C லோகநாதன், கோகுலநாத் ஹிந்து மஹாஜன ஹைஸ்கூல், சேலம்.
1272 V ஸ்ரீ ரெங்கராஜு, மஹாராஜா காலேஜ் ஸ்கூல், புதுக்கோட்டை.
2593 K மகாலிங்கம் A A M ஹைஸ்கூல், திண்டிவனம்.

2-வது வகுப்பு.

சேதுபதி ஹைஸ்கூல், மதுரை:-376, 378 to 384, 386 to396, 399, 400, 402, 403, 405 to 412, 414, 415, 418, 419, 421, 422, 423, 425.

A R ஹைஸ்கூல், மதுரை:-426, 427, 428, 430 to 435, 437, 439, 440, 442, 443, 444, 447, 448, 449, 452, 453, 455, 456, 457.

U C ஹைஸ்கூல், மதுரை:—461.

ஸெளராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை:— 466, 467, 472, 473, 475, 477, 479, 480, 481, 483, 486 to 491, 493, 494, 496 to 500.

ஸெண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை:— 502 to 505, 508, 511, 512, 514, 515, 516, 518, 519, 520, 523 to 527, 529, 532, 534, 537, 539 to 546, 548, 549, 552, 553, 554, 556, 560, 562, 564, 565, 574, 575, 576, 578, 579, 581, 583 to 587, 589, 591, 592, 594 to 600, 602, 603, 604, 610 to 615.

பசுமலை ஹைஸ்கூல், பசுமலை:-619, 626, 629, 636, 640, 641, 644, 649, 653, 658, 662, 664, 665, 667.

P K நாடார் ஹைஸ்கூல், திருமங்கலம்:—669, 671, 672, 673, 675, 676, 677, 679 to 687.

ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்:-689 to 694, 696 to 703, 706 to 710, 713.

ஸெண்ட் ஜோஸப் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சி:— 716, 717, 718, 726 to 729, 732, 733, 743, 744, 748 to 751, 753, 754, 755, 757 to 762, 770, 771, 775, 776, 779 to 783, 786 to 790, 792 to 797, 799, 803, 804.

நாஷனல் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சி:—806 to 814.

E R ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சி:—815 to 833, 835 to 841.

ஹோலி கிராஸ் காலேஜ், தெப்பக்குளம், திருச்சி:—843 to 846.

பிஷப் ஹீபர் ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சி:-847, 849, 850, 852 to 855, 857 to 861.

பொன்னையா ஹைஸ்கூல், திருச்சி:— 866, 867, 870 to 873, 875, 877, 880 to 885, 887, 888, 889, 891, 894, 896, 897.

பிஷப் ஹீபர் ஹைஸ்கூல், புத்தூர், திருச்சி:— 898 to 902, 905, 907 to 910, 913, 914, 915.

போர்டு ஹைஸ்கூல், அரியலூர்:—916 to 923.

ஷை லால்குடி:—929, 931, 935, 936, 937, 941 to 944, 947, 950, 954, 955.

விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்:—956.

C M ஹைஸ்கூல், திருநெல்வேலி:–957, 959 to 963, 965, 966, 968, 972.

ஸ்ரீ மந்திரமூர்த்தி ஹைஸ்கூல், திருநெல்வேலி:— 974, 975, 976, 978, 980 to 983, 985, 986, 987, 989, 991, 994, 995, 996.

காரனேஷன் ஹைஸ்கூல், ஸ்ரீவைகுண்டம்:–997, 1000 to 1005, 1007 to 1012, 1014 to 1017, 1019 to 1024, 1027, 1029.

போர்டுஹைஸ்கூல், தென்காசி:—1030, 1035 to 1041.

போர்டுஹைஸ்கூல், திருச்செந்தூர்:—1042, 1043, 1045, 1046.

கோகுலநாத் ஹிந்துமஹாஜனஹைஸ்கூல், சேலம்:—1052 to 1060, 1063, 1066, 1067, 1068, 1070 to 1074.

லிட்டில்ப்ளவர் ஹைஸ்கூல், சேலம்:—1075 to 1085, 1087, 1089 to 1099.

போர்டு ஹைஸ்கூல், ஆத்தூர், சேலம்ஜில்லா:–1100, 1102 to 1105, 1107, 1108.

ஸெண்ட்மேரி கெர்ல் ஹைஸ்கூல், அரிசிபாளையம், சேலம்ஜில்லா:— 1110, 1111.

கவர்ன்மெண்ட்காலேஜ் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்:—1112 to 1114, 1117 to 1119, 1121 to 1127.

மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு:—1129, 1131 to 1133, 1135 to 1138, 1141, 1146 to 1150, 1152 to 1157, 1160, 1162.

டையமண்ட் ஜுபிலி ஹைஸ்கூல், கோபிசெட்டிபாளையம்:—1128, 1165, 1170.

ஸெண்ட்ஜோஸப் செக்கண்டரிஸ்கூல், கூடலூர் N. T.:—1177 to 1179, 1183 to 1195, 1197 to 1203, 1206, 1208 to 1217, 1219, 1225 to 1235, 1237, 1238, 1240, 1241, 1242, 1244 to 1251, 1253 to 1256.

ஸெண்ட்ஆன்ஸ் கெர்ல் ஹைஸ்கூல், புதுப்பாளையம், கூடலூர். N.T.:—1259 to 1264.

மஹாராஜாகாலேஜ் ஸ்கூல், புதுக்கோட்டை:-1265 to 1270, 1273, 1274, 1277, 1278, 1280, 1282, 1283, 1285, 1287 to 1291, 1294.

மஹாராணி கேர்ல்ஹைஸ்கூல், புதுக்கோட்டை:-1295, 1296, 1297, 1299 to 1301, 1303 to 1308.

C. S. M. ஹைஸ்கூல், புதுக்கோட்டை:—1309, 1310, 1315 to 1323, 1326 to 1334, 1336, 1338, 1340 to 1344.

கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்:- 1345 to 1355, 1357 to 1359, 1361 to 1372, 1374 to 1384.

ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்:—1385 to 1390, 1392, 1394, 1395, 1397 to 1402, 1404, 1405.

போர்டு ஹைஸ்கூல், ஒரத்தநாடு:—1408, 1409, 1411 to 1415, 1417, 1419, 1420, 1422, 1424, 1427, 1430, 1432.

போர்டுஹைஸ்கூல், அய்யம்பேட்டை:—1436 to 1439.

ஸர். சிவஸ்வாமிஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி:—1440 to 1445, 1447.

ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்:- 1452, 1453, 1455 to 1458, 1462, 1466 to 1472.

C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்:—1476, 1479 to 1485, 1492 to 1495, 1498.

கோமதி எட்வர்டு போர்டுஹைஸ்கூல், சங்கரன்கோவில்:—1499, 1502, 1503, 1505, 1506, 1508, 1509, 1511, 1513, 1514, 1516 to 1519.

ஊரீஸ் ஹைஸ்கூல், வேலூர்:—1520 to 1537, 1539 to 1545, 1548, 1550 to 1556.

முனிஸிபல் ஹைஸ்கூல், வாலாஜாநகர் N. A. Dt:—1557, 1559, 1561.

ஷெர்மன் மெமோரியல் கேர்ல்ஹைஸ்கூல், சித்தூர்:-1563 to 1566, 1568.

ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை:—1569 to 1573, 1578 to 1584, 1587 to 1592.

ஸர். எம். ஸிடி. முத்தையசெட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை:—1597 to 1600, 1606, 1607, 1608, 1611 to 1614, 1616 to 1620, 1622, 1624, 1625, 1626, 1629 to 1633.

ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை:—1634 to 1637, 1639 to 1646, 1648, 1649, 1651 to 1655, 1659 to 1663.

பச்சையப்பாகாலேஜ் ஸ்கூல், சென்னை:—1664, 1681, 1682, 1685, 1686, 1690, 1692, 1693, 1695, 1699, 1701, 1708, 1709, 1710, 1712, 1714.

முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை:—1719, 1720, 1721, 1724, 1725, 1728, 1732, 1734, 1735.

கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல், சென்னை:—1736, 1741, 1742, 1744, 1745, 1748, 1751, 1756, 1761, 1766 to 1769, 1775.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஹைஸ்கூல், தியாகராஜநகர்:- 1778, 1783, 1784, 1789, 1791, 1792, 1793, 1795, 1798, 1799, 1802 to 1804, 1806, 1807, 1810, 1811, 1814.

R B C C C's ஹைஸ்கூல், பெரம்பூர், சென்னை:—1821, 1822, 1823, 1828, 1832, to 1834, 1836, 1837, 1841, 1847, 1849 to 1851, 1854, 1855, 1856, 1358, 1859, 1866 to 1870.

பெஸன்ட் தியஸாபிகல் கலாசாலை, அடையாறு, சென்னை:—1875, 1876.

கெல்லெட் ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை:—1879, 1881, 1882, 1884, 1885.

E L M F ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை:—1891, 1894.

T M T V ஹைஸ்கூல், சென்னை:—1897, 1900, 1904, 1905, 1908, 1910, 1917, 1919, 1923, 1924, 1926, 1930.

நாஷனல் கேர்ல் ஹைஸ்கூல், மயிலாப்பூர், சென்னை:—1933 to 1936, 1938, 1939, 1940, 1942, 1943, 1944.

ஸ்ரீ. சாரதாவித்யாலய கேர்ல் ஹைஸ்கூல், தியாகராஜநகர்:—1945, 1946, 1947, 1951, 1953 to 1955, 1957.

லேடிவில்லிங்டன் ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை:—1959, 1961 to 1969.

முனிஸிபல் ஹைஸ்கூல், மாயவரம்:—1971, 1972, 1973, 1975, 1979 to 1981, 1984, 1987, 1988, 1989, 1999 to 2002, 2005 to 2017, 2019, 2020, 2023, 2027, 2030, 2033 to 2036.

பிண்டிலேஹைஸ்கூல், மன்னார்குடி:—2038 to 2045, 2047, 2048, 2053, 2058, 2059, 2061, 2062, 2064, 2067, 2068, 2071, 2072, 2074 to 2077, 2079, 2081.

நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி:—2085, 2086, 2087, 2089, 2091 to 2097, 2100, 2105, 2106.

பச்சையப்பாஹைஸ்கூல், காஞ்சீபுரம்:—2107, 2109, 2111 to 2115, 2117.

ஆண்டர்ஸன் ஹைஸ்கூல், காஞ்சீபுரம்:—2118 to 2125, 2128 to 2141.

ஸெண்ட்கொலம்பாஸ் ஹைஸ்கூல், செங்கற்பட்டு:—2142, 2143, 2145 to 2154.

ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு:—2155 to 2166, 2168, 2170 to 2179.

ஸெண்ட்மேரி கெர்ல் ஹைஸ்கூல், செங்கற்பட்டு:—2180 to 2183, 2185 to 2187.

போர்டுஹைஸ்கூல், செய்யாறு, திருவெட்டிபுரம் போஸ்டு:—2188, 2189, 2191 to 2202.

ராமகிருஷ்ண குருகுலவித்யாசாலா (மயிலாப்பூர்) உத்திரமேரூர்:—2203 to 2218.

ஸெண்ட் பிரான்ஸிஸ் ஸேவியர் ஹைஸ்கூல், தூத்துக்குடி:—2219, 2220, 2224, 2228, 2230, 2231, 2233, 2234, 2238.

S A V ஹைஸ்கூல், தூத்துக்குடி:—2239 to 2242.

போர்டு ஹைஸ்கூல், போளூர், N. A. Dt.:—2243 to 2254.

ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி:—2255 to 2262, 2268, 2271 to 2274, 2276, 2280, 2281, 2292, 2295.

ஹைஸ்கூல், பத்தமடை:—2302, 2306, 2309.

போர்டுஹைஸ்கூல், திருவாரூர்:—2312, 2313, 2316, 2317, 2318, 2321 to 2325, 2327, 2328, 2329, 2333 to 2337, 2339.

போர்டு ஹைஸ்கூல், நன்னிலம்:—2340 to 2342, 2345, 2346.

போர்டுஹைஸ்கூல், கூத்தாநல்லூர், தஞ்சாவூர்ஜில்லா:—2352 to 2355, 2357.

முனிஸிபல்ஹைஸ்கூல், விழுப்புரம்:—2363, 2365, 2366, 2368, 2370 to 2379, 2381 to 2384, 2386 to 2391, 2393, 2394, 2395, 2397, 2398, 2399, 2401.

R C T ஹைஸ்கூல், சிதம்பரம்:—2403, 2404, 2405, 2407, 2409, 2410, 2416, 2417, 2418, 2421, 2423, 2425, 2427, 2428.

பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்:—2429, 2430, 2431.

L M C ஹைஸ்கூல், சீர்காழி:- 2440, 2441, 2443, 2444, 2445, 2447, 2448.

S M ஹிந்துஹைஸ்கூல், சீர்காழி:—2450, 2453 to 2456, 2458, 2459.

போர்டுஹைஸ்கூல், நாங்குனேரி:—2464 to 2470, 2473, 2476, 2477.

ஹிந்துஹைஸ்கூல், ஆம்பூர்:—2479, 2483, 2485, 2487 to 2492.

மஜ்ஹருல்உலூம் ஹைஸ்கூல், ஆம்பூர்:—2495 to 2502.

கன்கார்டியா ஹைஅண்டுடிரெயினிங் ஸ்கூல், ஆம்பூர்:—2503, 2506, 2507, 2509 to 2511, 2513 to 2519, 2522 to 2525.

ஸெண்ட் இக்னேஷியஸ் கான்வென்ட் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை:— 2527 to 2530.

A V ஜோஸப் ஹைஸ்கூல், இட்டமொழி:— 2531, 2534, 2537, 2538, 2541 to 2546, 2549, 2551, 2560.

முனிஸிபல் ஹைஸ்கூல், திருப்பத்தூர், N. A. Dt.:- 2561 to 2564, 2568, 2569, 2570, 2572 to 2585, 2587, 2588.

A A M ஹைஸ்கூல், திண்டிவனம்:—2589, 2591, 2592, 2594 to 2597, 2599 to 2602.

போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை:-2603, 2604, 2606, 2607, 2608, 2610 to 2616, 2618, 2619, 2621 to 2633.

ஷை கோயில்பட்டி:—2634, 2635, 2638, 2639, 2641 to 2645, 2647 to 2662, 2664 to 2666, 2668, 2670, 2671.

A C ஹைஸ்கூல், பள்ளத்தூர்:— 2673, 2674, 2676, 2678 to 2690, 2695, 2696.

T A ஹைஸ்கூல் திருவிடைமருதூர்:—2697 to 2702, 2705 to 2708, 2710, 2712, 2713, 2714, 2717 to 2720, 2727, 2730, 2732.

நாஷனல் ஹைஸ்கூல், நாகபட்டினம்:-2738, 2739, 2745, 2747 to 2749, 2757, 2761, 2763, 2765, 2768 to 2771, 2773,

மெதோடிஸ்ட் மிஷன் ஹைஸ்கூல், நாகபட்டினம்:—2774 to 2777, 2779, 2780, 2781, 2783, 2785 to 2788, 2790, 2792, 2793.

போர்டு ஹைஸ்கூல், கமுதி:—2794 to 2804, 2806 to 2815.

முஸ்லீம் ஹைஸ்கூல், அபிராமம்:-2817, 2823, 2824, 2826, 2827, 2828, 2830, 2832, 2837, 2841.

போர்டு ஹைஸ்கூல், சோழவந்தான்:- 2842, 2844, 2847, 2849, 2851 to 2855, 2858 to 2861.

மதுரைத்தமிழ்ச்சங்கம், 25—10—'45.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.